உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.


தொகுதி—சக.] சுபாநு-ஹு பங்குனிமீ [பகுதி—ரு.

**Vol. 41.** **March-April 1944** **No. 5.**


உள்ளுறை.


கம்பராமாயணசாரம் (உத்தரகாண்டம்):— } ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் G.B.V.C. கசுக—கஎ௦

அநுதாபக்குறிப்பு:— ... ... ... கஎக

ஸ்ரீலஸ்ரீ. சாமிநாதசுவாமி களைப்பற்றிய நினைவுக் குறிப்புக்கள்:— } ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் G.B V.C. கஎஉ—கஎசு

பண்டைத்தமிழர்:— } சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர். கஎஎ—கஅங

மதுரைத்தமிழ்ச்சங்க நிர்வாகஸபைத்தீர்மானங்கள்:— கஅச—கஅரு

மதிப்புரை:— ... ... ... கஅரு—கஅசு

பாரதசேனாபதீயம்:— } T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர். கஅஎ—உ௦௦


பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.


வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1944

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and
Published by Thiru. Narayana Iyengar at the Tamil Sangam Power Press,
No. 54, Tamil Sangam Road, Madura.

# ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

---

## மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

| | I. சங்கப்பிரசுரம். | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் | ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... | ... | 1 | 8 | 0 |
| 3. | *யாப்பணியிலக்கணங்கள் ... | ... | | | |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... | ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... | ... | 3 | 0 | 0 |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் | ... | 4 | 0 | 0 |
| 7. | *தோத்திரத்திரட்டு ... | ... | | | |
| 8. | * தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய முதற்பாகம் | | 6 | 0 | 0 |
| | * ஷை இரண்டாம்பாகம் | ... | 4 | 8 | 0 |
| | ஷை மூன்றாம்பாகம் | ... | 5 | 0 | 0 |
| 9. | *அபிதானசிந்தாமணி ... | ... | | | |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) | | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... | ... | 0 | 6 | 0 |
| 12. | *அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் | ... | | | |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா | ... | 0 | 6 | 0 |
| 14. | *தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி | ... | | | |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை | ... | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம் | ... | 1 | 4 | 0 |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) | ... | 0 | 4 | 0 |
| | திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன | | 0 | 1 | 0 |

---

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

| தொகுதி–சக.] | சுபானு-ஹூ பங்குனி மீ | [பகுதி–ரு. |
| --- | --- | --- |
| Vol. 41. | March–April 1944. | No. 5. |

## கம்பராமாயணசாரம்

### உத்தரகாண்டம்

[ராவ்ஸாஹிப். ஸ்ரீ. வெ. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள் G.B.V.C.]

கசூo-ஆம்பக்கத் தொடர்ச்சி.

#### வேள்விக்குதிரை மீண்டுவருதல்.

இராமன், வேண்டுவார் வேண்டியவற்றையெல்லாம் வேண்டிய அளவுக்கு மிகுதியாக விருப்புடன்கொடுத்துக் களித்துப் போது போக்கிக்கொண்டிருந்தபோது, ஒருவருடமாகப் பூவலஞ்செய்யக் காப்பாளரோடு அனுப்பிய வேள்விக்குதிரை, திரும்பவரக்குறித் திருந்தநாளில் வந்துசேர்ந்தது.

#### வேள்வி.

கங்கை முதலிய புண்ணியநதிகளின் நீரும் நான்குதிசைகளி லுள்ள கடல்களின் நீரும் வேள்விக்குவேண்டிய மற்றெல்லாப் பொருள்களும் கொண்டுவரப்பட்டன. யாகபத்தினியின் தானத் திலே சீதையின்வடிவமாக அமைத்த பொற்பாவை கொண்டுவந்து வைக்கப்பட்டது. யாகபுரோகிதர், பதினறு யூபத்தம்பம் (வேள்வித் தூண்) நாட்டினார்கள், அந்தத் தம்பங்களில் நல்ல இலக்கணம் பொருந்திய பதினறுகுதிரைகளைக் கட்டினார்கள்; ஓதற்குரிய மந்திரங்களை அவைகளின் செவிகளில் ஓதி, அவைகளின் சதை களை இரத்தம் எட்டுத்திசைகளிலும் பாய அரிந்து, வேள்வித் தீயிலே சொரிந்து, ஓமஞ்செய்து, தேவர்க்கு அவிப்பலியளித்தனர்.

## குசலவர் இராமன்சபையில் யாழிசைத்து வான்மீகிராமாயணத்தைப் பாடுதல்.

சீதைவடிவமாகச்செய்த செம்பொற்பாவையை யாகபத்தினியாகக்கொண்டு, இராமன், யாகபுரோகிதன் இவ்வாறு செய்கவெனத் தெரிவித்தபடி கிரியைகளைச்செய்து அசுவமேதயாகம் நிகழ்த்திக்கொண்டிருக்குங்காலத்திலே வான்மீகி குசலவர்களை நோக்கி, 'இராமன்வீரச்செயல்கள் விளங்கக்கூறும் இராமாயண காவியத்தை இராமன்சபைக்குச்சென்று பாடுங்கள்; நீங்கள் சீதாதேவியின்மக்களென்பதைத் தெரிவியாதீர்கள்' என்று பணித்தான். பேரழகுடைய அவர்கள் காமனும் அவன் தம்பி சாமனும் முனிவேடம்பூண்டுவந்தாரோவென்று கண்டார் சொல்லும்படி தலையிற் சடையும் மார்பில் முப்புரிநூலும் அரையில் மரவுரியும் உடையராய் விளங்கினார்கள். அவர்கள் வான்மீகியை வணங்கி விடைபெற்றுச் சீதையிருந்த சாலைக்குச்சென்று வணங்கி, அவள் விடையும் பெற்றுத் தங்கள் யாழ்களை யெடுத்துக்கொண்டு புறப்பட்டுக் கங்கையாற்றங்கரையையடைந்து, அங்குள்ள முனிவரோடு சென்று, அசுவமேதயாகசாலையை அடைந்தார்கள்.

அவர்களைக் கண்டவர்கள், 'இவர்கள் முனிவேடம்பூண்ட கடவுளரென்பாரும், இவர்களுடைய கண்களும் கைகளும் கால்களும் கமலங்களென்பாரும், இவர்களையொத்த அழகுபடைத்தவர் எங்குமில்லையென்பாரும், இவர்கள் யாழேந்தாமல் வில்லேந்தினால், சிறியதாயின்கட்டளைப்படி சடைமுடிதரித்து மரவுரியுடுத்து வில்லேந்திக் காட்டுக்குச்சென்ற காகுத்தனேபோல்வார்களென்பாருமாயினர்.

அவர்கள், வேள்விச்சாலையிலிருந்த வேந்தரும் முனிவரும் விண்ணவரும் மகிழும்படியாகவும் தும்புரு நாரதர் தோற்கும்படியாகவும் யாழிசைத்து, இராமன்கீர்த்தியைப் பாடினார்கள். அவர்கள் பாடியதைக்கேட்டு மனமுருகிய சிலர் இராமனிடஞ்சென்று, 'முனிச்சிறுவர் இருவர் நின்கீர்த்தியைப் பாடுகின்றார்கள். வேள்விகாணவந்திருக்கின்ற முனிவரும், மன்னரும், மற்றெல்லாரும் அப்பாடலைச் செவிமடுத்துச் சிந்தைகனிந்து "இது தெய்வகானம்; நாம்

கேட்டறியாதது" என்று வியப்படைகின்றார்கள்' என்று விண்ணப்பித்தார்கள். இராமன், அச்சிறுவரை அழைத்துவரும்படி கட்டளையிடத் தூதர் சென்று குசலவரை இராமனுடையசபைக்கு அழைத்துவந்தார்கள். இராமன், அவர்களைப் பாடும்படி கூற, அவர்கள் யாழிசைத்து வான்மீகிராமாயணத்தை ஆதிதொடுத்து அந்தமளவும் முறையாகப் பாடிமுடித்தார்கள். அவர்களை இராமன் மகிழ்ந்துநோக்கி, 'இந்தக்காவியத்தை இயற்றியவர் யாவர்? நீங்கள் யாவிர்?' என்று வினவ, அவர்கள் 'உன்புகழைப் புனைந்துரைக்கும் இந்தக் காவியத்தை ஆக்கியவன் வான்மீகிமுனிவன். நாங்கள் அவன் மாணுக்கர். எங்கள்பெயர் குசலவர்' என்றனர்.

## இராமன் குசலவர்க்குப் பரிசளித்தலும் அவர்கள் மறுத்தலும்

அவர்களுக்கு இராமன், 'பத்துக்கோடிக்கும் மேலான பொன்னைக் கொள்க' என்று கொடுக்க, அவர்கள், 'பொருள், மன்னராலும் கள்வராலும் வலிதிற் பறித்துக்கொள்ளக்கூடியது; இழந்தவரை இரங்கச்செய்வது; காக்கும்பொருட்டுத் தூக்கத்தை நீக்கச்செய்வது; உடைமையினும் இன்மை நன்று' என்று கூறி மறுக்க, அவன் 'ஏழையை இராசனாக்கவும் போகப்பொருள்களை அடையச்செய்யவும் சுவர்க்கஞ்சேர்க்கவும் எடுத்தகாரியமெதனையும் முடிப்பிக்கவும் பகைவரை வாடி வருந்தச்செய்விக்கவும் வல்ல கருவி பொருள். கொடுப்பதை மறுக்காது கொள்க' என, அவர்கள், 'இலைகளும் கிழங்குகளும் காய்களும் கனிகளும் உண்ணும் முனிவரோடுவாழ்கின்ற எங்களுக்கு நீ கொடுக்கும் காஞ்சனம் (-பொன்) காஞ்சிரங்காய் [—(கசப்பும் கொல்லுதலுமுடைய) எட்டிக்கொட்டை] போலும்' என்றார்கள். அவன், 'மறுபடியும் வருவீர்களோ?' என, 'நாங்கள் நாள்தோறும் வந்து பாடுவோம்' என்றுகூறி விடைபெற்றுப்போனார்கள். அவர்கள் தாம் கூறியவாறு சபைக்குவந்து பாடிக்கொண்டிருந்தநாள்களிலே, ஒருநாள், இராமன், அவர்கள் சீதைகுமாரரென்பதைத் தெரிந்து, அன்புகூர்ந்து, அவர்களை இருகையார இறுகத்தழுவி மார்போடழுந்த அணைத்துக்கொண்டான். இலங்கையிலே சீதையைத் தீக்குளிக்கச்செய்து அங்கேயிருந்த அமரர்முதலியோர் அவள்கற்புண்மையை அறியச்செய்ததுபோல,

அயோத்தியிலும் அக்கினிப்பிரவேசம்செய்யச்செய்து, இங்கேயுள்ளார் அறியச்செய்வேனென்று இராமன் தன் மனத்துள் எண்ணிக் குமாரரிருவரும் வான்மீகியிடம் போய்ச்சேரலாமென்றுசொல்லிச் சபைக்கு வந்திருந்த வேதியர் வேந்தர் முதலோர்க்கு விடைகொடுத் தனுப்பியபின், தூதரைத் தருவித்து, 'வான்மீகிமுனிவரனையும் சீதாதேவியையும் (குசலவரையும்) அழைத்துக்கொண்டுவாருங்கள்' என்று கட்டளையிட்டனுப்பிவிட்டு அரண்மனைக்குப்போனான்.

## சீதை வான்மீகிமுனிவனுடன் இராமன்சபையையடைதலும் அவளைக்கண்டோர் இரங்குதலும்

தன்னை வனத்திற்கொண்டுவந்துவிட்டுவிட்டு இலக்குமணன் போனபின்பு, தனக்குநேர்ந்த பழிக்கஞ்சித் தன்னைப்பற்றி ஊரார் கூறிய பழிச்சொல்லாலுண்டாகிய மானம் வேல்போல மனத்துள்ளே பாய மேலும்மேலும் வருந்தி வாடிக் கண்ணீர் ஆறுகவடிகின்றவளை அழைத்துக்கொண்டு, வான்மீகி இராமன்சபையை அடைந்தான். அவளைக் கண்டவர்கள், அரசன் ஆலோசனையின்றி இவளைத் துறந்தானென்பாரும் அவளுடைய பரிதாபநிலைமையைப் பார்க்காதபடி கண்ணைப்புதைப்பாரும், பெண்ணாகப்பிறந்தவர்களில் இவளைப்போலத் துன்புற்றவளொவளுமில்லையென்பாருமாயினர். (மாங்கலிய அணியன்றி மற்றையணி ஒன்றும் இல்லாளாய்), முடியாத கூந்தல் தாழ்ந்து விழுந்து பின்னங்காலை மறைக்கப்பெற்றவளாய், வெள்ளைச் சேலையுடுத்தவளாய்த் தள்ளாடும் நடையுடையவளாய்ச் சீதை பின் தொடர்ந்துவர, வான்மீகிமுனிவன் இராமன் சபையை அடைந்தான்.

## இராமன் சீதையின்கற்பை நிரூபிக்குமாறு கூறுதல்

அவனை இராமன் அடிபணிந்து ஆதனத்தில் வீற்றிருக்கச்செய்து தானும் ஆதனத்தில் அமர்ந்தான். சீதை வாடிக் கவிழ்ந்தமுகத்தினளாய்ப் பூமியைநோக்கியவண்ணமாக நின்றாள். 'உன் காதலியின் கற்பு மண்ணிலுள்ள கற்பரசிகளாலன்றி விண்ணிலுள்ள அருந்ததியாலும் போற்றிப் புகழ்தற்குரியதென்பதை நான் அறிவேன். இஃது உண்மைமொழி (-சத்தியவசனம்). இதனை மறுப்போர் நரகில் வீழ்வர்' என்று வான்மீகி கூற, இராமன் 'நீ கூறியது உண்மையென்பதை நானும் வானவரும் முன்னமே அறிந்திருக்கின்றோம். ஆயினும் அதனை உலகத்தோர் அறியும்படி செய்தல்வேண்டும்' என்றான்.

## சீதை சினத்தலும் வான்மீகிகூற்ருற் சினந்தணிதலும்

நாயகன் உவந்தாலும் சினந்தாலும் நன்றென்றுகருதுமியல்புடைய சீதை, நான்குதிசைகளிலுமுள்ள மாந்தர்கள் வந்து கூடியிருக்கின்ற சபைநடுவிலே இவ்வாறு இராமன் கூறியதைக் கேட்டபோது (தன் நாயகன் தன்கற்பைப்பற்றி ஐயமுற்றதாகக் கூறியதனால் அதனைத்தீர்த்தல் தன்கடமையென்று இலங்கையிலே தீக்குளித்தெழுந்து தன் கற்பினை அவனுக்கு மெய்ப்பித்ததுபோலத் தன்மீது பழிகூறித் தன் நாயகனைவிட்டுப் பிரியும்படிசெய்தவர்கள் திறத்தும் செய்வதோவென்று) கொதித்தெழுங்கோபமுடையளாய், 'என் தூய்மையை(த் திரும்பவும் தீக்குளித்துக்காட்டாமல்) என் நெஞ்சை யிருகூருகப் பிளந்துகாட்டுவேன்' என்று கூறினுள். வான்மீகி, 'அம்மையே! சீருதே. உன் காதலன் கூறியவண்ணம் செய்து சந்தேகம் நீங்கச்செய்வாயாக' என்று கூறிச் 'சாந்தம் உண்டாவதாக' என்று சங்கற்பித்துத் தன் கமண்டலநீரைக் கையிற்பெய்து ஆசமனஞ்செய்தான். தன் கணவன்கொடுமையை மனத்துட்கொள்ளாத அவள், அவன் செய்தனவெல்லாம் தனக்கு இதமானவையேயென்று எண்ணினுள்.

## சீதை மறைதல்

(தன்னைப்பிரிந்தபின் தளர்ந்து மெலிந்திருந்த) அவன் திருமேனிநிலைமையைக் காணப் பொறுக்கமாட்டாதவளாய் அவன் அடிகளில் விழுந்து வணங்கி, (வயிற்றைப் பிளந்து குடலைப் பிடுங்கி யெறிந்தாலும் செவ்வலரிமாலையென்று செப்பும் இயல்புடைய உலகத்தாரைத் திருப்திப்படுத்தத் தன் நாயகன்கருத்துப்படி தீக்குளிப்பதிலும் சிறந்த செயல், அவர்கள் தன்னை என்றும் எங்குங் காணுதபடி இறந்து மறைந்தொழிதலே யென்று கருதினுள் போன்று) 'பூதேவியே! விசுவாமித்திரமுனிவன் வேள்வியைக்காத்து மிதிலைக்குவந்து எனக்காக ஈசன்வில்லை முறித்து என்னைக் கைப்பிடித்த என் நாயகனையன்றி வேறெந்தப்புருடனையும் (தேகத்தால் தீண்டுதல் கிடக்க,) சிந்தையினுலும் தீண்டிலேனென்ருல் எனக்கு வழிதருவாயாக என்னைப்பெற்ற தாயே! தரைபிளக்கச்செய்து வழி திறப்பாயாக' என்ருள். உடனே, பூமிக்குள்ளிருந்து பூமியின் அதிதேவதையான பூதேவி வெளிப்பட்டுச் சபையிலிருந்தவர்களெல்லோரும் காணும்படி தோன்றிச் சீதாதேவியை வாரியெடுத்து மார்போடிறுகத் தழுவி ஏந்திக்கொண்டு பூமிக்குள்ளே மறைந்துபோனுள்.

## சீதையை மறைத்த பூமியை மிதித்தழிக்கக்கருதிய இராமனைப் பிரமன் சாந்தப்படுத்தல்

இராமன், சீதையைக் காணாததோடு அவள்சென்ற வழியையுங் காணானாய், 'நான் நினைத்ததொன்று. நிகழ்ந்தது வேறொன்றாம்படி பூதேவி செய்தாள்' என்று அவள் மீதே சினங்கொண்டான். இப்போது இராமனாயிருக்கிற திருமால், திரிவிக்கிரமனானபோது [தான் (-பூமி) அவனுடைய]ஓர் அடிவைக்கவும் இடம் பற்றாததாயிருந்ததையும், வராகமூர்த்தியானபோது ஒரு கொம்பிலே தங்கும்படியாகவும், கண்ணனானபோது வயிற்றுளடங்கும்படியாகவும் சிறிதாயிருந்ததையும் மறந்து பூமி, அவன்கருத்துக்கெதிராகச் சீதையை மறைத்ததை என்னென்பது! இராமன், 'நான் கடலின் மீது கோபங்கொண்டு அம்பெய்தபோது தீப்பற்றிய கடலின் இடையே தோன்றிய திடர்களுள் ஒன்று போன்ற ஒரு சிறு பூமிப்பகுதி சீதையை மறைத்திட்டது. இந்தப்பூமியைக் கடலுளழுந்திச் சேறாகும்படி மிதிப்பேன்' என்று கொதித்துக்கூறியபோது, பிரமதேவன் பிரசன்னமாகி, 'நான் உனக்கு உரைப்பதொன்றுள்ளது. அதனைக் கேட்டருள்வாயாக. நீ, குழந்தைவடிவங்கொண்டு பெரிய உலகங்களையுண்டு சிறிய ஆலிலைமீதுபள்ளிகொண்ட பரம்பொருள். மின் மேகத்திடைத்தோன்றி மறைவது போல, உலகங்களும் உயிர்களும் உன்னிடைத் தோன்றி ஒடுங்குவன. தேவர்வேண்டுகோளுக்கு இணங்கி, இராவணவதஞ்செய்ய மானுடனாக அவதரித்த உன்னுடன் வாழ்தற்காக, உன்காதலி, சீதையாகப் பூமிக்குள்ளிருந்து வெளிப்பட்டவள், திரும்பிப் பூமிக்குள்ளே போயினாள். இனி, நீ பரமபதத்துக்குத் திரும்பியபோது அவளை அங்கே காண்பாய்' என்று கூறினான். அவன் கூறியதைக் கேட்ட இராமன் சினம் நீங்கினான். பின்பு (சீதை பிரிந்த துன்பம் நீங்கக்) குசலவரைத் தழுவியின்புற்று, வேள்விச்சாலையையடைந்தான். அங்கே நூறு அசுவமேதயாகஞ்செய்துமுடித்தபின்பு (வேள்வி காணவந்திருந்தவர்களுக்கு விடைகொடுத்து அவரவரிடம் செல்ல அனுப்பிவிட்டு) அயோத்திக்குத் திரும்பிவந்து, அன்பர்கள் சூழ அரசர்கள் போற்ற இனிதாக அரசுசெய்து இன்பமுற்றிருந்தான்.

௧௫-வது அசுவமேதயாகப்படலம் முற்றிற்று

## ௧௮-வது கந்திருவர்வதைப்படலம்

பரதன் (தனது தாய்மாமன் கைகேயனைப் போரில் வென்று அவனுடைய நாட்டைக் கவர்ந்த) கந்திருவரைப் போர்செய்து கொன்றதைக் கூறுவது.

### கோசலை மரணம்

இராமன் அசுவமேதயாகஞ் செய்துமுடித்துச் சிறிதுகாலம் கழிந்தபின், கோசலையின் ஆயுள் முடிவுற்றது. அவன், அவள் காலில்விழுந்து, 'அன்னையே! அன்னையே! என்னைக் கைவிட்டு என்னையன் முன்சென்றான். இப்போது நீயும் என்னைக் கைவிட்டாய்! இதோ, நான் உன்பின்னே வந்தேன்! வந்தேன்! (உன்னைப் பிரிந்தபின் பிழைத்திரேன்!) நீ என் ஐயனைநாடியடைந்ததுபோல, நானும் அடைய உன்பின்னே வந்தேன்! வந்தேன்!! என்று கதறி வருந்தினான். பரத லக்குமணரும் புலம்பி வருந்தினார்கள். மாதர்கள் கூந்தலைக் குலைத்து மார்பிலறைந்துகொண்டு பூமியில்விழுந்து புரண்டழுது புலம்பினார்கள்.

### கோசலை தகனம்

சனங்கள் துக்கமிகுதியால் தலைமேற் கைவைத்துப் பின்செல்லக் கோசலையின்தேகம் மயானத்துக்குக்கொண்டுபோய் அகிற்கட்டைகளும் சந்தனக்கட்டைகளும் அடுக்கிய ஈமப்பள்ளியிலேற்றப்பட்டது. அப்போது இராமன் கொள்ளிவைத்து எள்ளும் தண்ணீரும் இறைத்துப் பிண்டங்கொடுத்தான். பின்பு பிராமணருக்குக் கோதானம் பூதானம் முதலிய தானங்கள் கொடுத்தான்.

### கைகேசி சுமித்திரைகளின் மரணம்

சிலநாள் கழிந்தபின் கைகேயியும் சுமித்திரையும் காலமானார்கள். கோசலைபொருட்டுச் செய்ததுபோல அவர்கள்பொருட்டும் உத்தரக்கிரியைகளும் தானங்களும் செய்யப்பட்டன.

### துக்கம் விசாரிக்க வந்திருந்தவர்களுக்கு இராமன் விடைகொடுத்தனுப்புதல்

இராமன், சத்துருக்கன் சுக்கிரீவன் அங்கதன் அனுமான் விபீடணன் (குகன்) முதலியவர்களுக்கு அவரவர்தலங்களுக்குப் போக விடைகொடுத்தனுப்பி அரசர் சூழச் சிங்காதனத்திலிருந்து அரசுசெலுத்திவந்தான்.

## கைகேயன் நாட்டைக் கவர்ந்த கந்திருவரைக் கொல்லும்படி காசிபன் இராமனுக்குக் கூறுதல்

பரதனுடைய தாய்மாமனான கைகேயனுடைய குலகுருவான காசிபமுனிவன், இராமன்சபையை அடைந்தான். இராமன் அவனை அடிவணங்கி, 'நீ வந்தகாரணம் யாது?' என வினவினான். 'கந்திருவர் கைகேயனைப் போரில் தொலைத்து அவனுடைய நாட்டைக் கவர்ந்துகொண்டார்கள். அவர்களைக் கொன்று அந்த நாட்டை நீ ஆளுதல் முறை' என்று முனிவன் விடையளித்தான்.

## பரதனையும் மக்களையும் கந்திருவருடன் போர்செய்ய அனுப்புதல்

'கந்திருவரைப் போர்செய்து தொலைத்து, அவர்கள் கவர்ந்திருக்கிற சிந்துநாட்டைக் கைப்பற்றி, அந்தநாட்டுக்கு உன் குமாரர் தக்கன், புட்கரன் இருவரையும் அரசராக்கித் திரும்பி வருவாயாக' என்று இராமன் பரதனுக்குக் கட்டளையிட்டான்.

## அவர்கள் நால்வகைச்சேனையுடன் போர்க்குப்புறப்படுதல்

வாயிலே பிறைமதிபோன்ற கொம்புகளும், நெற்றியில் நிறைமதிபோன்ற திலகமும், நீண்ட துதிக்கையும், தீப்போலச் சிவந்த கண்களும், முறம்போன்ற காதுகளும், மலைபோன்ற உடலும், மலைவீழருவிகள்போலச்சொரியும் மும்மதமும், இடிபோல அதிர்ந்து பிளிறுதலும், (வேறுயானையென்று) நிழலோடு பொருதலுமுடைய யானைச்சேனையும், ஒலிக்கின்ற மணிகள் தொங்கவிட்டலங்கரிக்கப்பெற்றனவும் பொன்னினாற்செய்த கொடிஞ்சியும் செவ்வரக்கூட்டிய சக்கரங்களும் உடையனவாய் நந்நான்கு குதிரைகள் பூட்டப்பெற்ற தேர்ச்சேனையும், பலநிறங்களுடைய இரத்தினங்கள்போலப் பலநிறமும், பறவைகளென்னும்படி வேகமாகச்செல்லும் கதியும், கால்கள் தரையில் மிதிப்பது தெரியாதபடி விரைந்து தாவுதலும், வலசாரி இடசாரியாகச் சுழலுதலுமுடைய குதிரைச்சேனையும், வில்லும் வேலும் ஏந்திய கையினரும் வீரக்கழலணிந்த காலினரும் நிறைந்த காலாட்சேனையுமாகிய (ரதகஜதுரகபதாதியென்ற) நால்வகைச்சேனையும் முன்செல்லப் பரதனும் அவன் குமாரர் தக்கபுட்காரிருவரும் தேரேறிச்சென்றார்கள்.

அயோத்திமாநகரத்தின் மதிற்கோபுரவாயில் நின்று வெளிப்பட்ட அந்தச் சேனை, திருமால் உண்ட உலகம் அவன் உமிழ்ந்தபோது அவன் வாயினின்று வெளிப்பட்டது போன்றது. * அந்தச்சேனை பாலை குறிஞ்சி நெய்தல் நிலங்களைக் கடந்து மருதநிலமான சிந்து நாட்டை அடைந்தது.

## கந்திருவர்சேனை போர்புரியப் புறப்படுதல்

பரதனும் அவன் குமாரரும் சேனையுடன் சிந்துநாட்டுக்கு வந்துவிட்டதைத் தெரிந்தபோது, கந்திருவர், கடுஞ்சினங் கொண்டு, முகம் கடுகடுக்கப் புருவம் வளையக் கண்சிவந்து கனல் கக்கக் கைகளால் தோள்களைப் புடைத்து, இடியிடித்தாற்போல (இகழ்ச்சிச்சிரிப்பு)ச் சிரித்துப் 'பரதனையும் அவன் மக்களையும் கொன்று அவர்களை ஏவிய இராமனுடன் போர்புரிவோம்' என்று கூறி, 'எழுக சேனை' எனச் சேனைகள் எழுந்தன. சேனைகளோடு சேனைத்தலைவர் தேரேறி நகரைவிட்டுப் புறப்பட்டனர். அப்போது அபசகுனங்கள் காணப்பட்டன. நான்குகடல்கள் ஒலித்தல்போன்ற நால்வகைச் சேனைகளின் ஆரவாரமும் யுத்தவாத்திய முழக்கமும் வீரர் வில்நாண் தெறிக்கும் ஓசையும் கலந்தொலித்தன.

## போர்

இருபக்கத்துப் படைகளும் எதிர்ந்தபோது, தேர்ப்படை தேர்ப்படையோடும் யானைப்படை யானைப்படையோடும் குதிரைப் படை குதிரைப்படையோடும் காலாட்படை காலாட்படையோடும்

---

* அமிழ்தினும் நுகர்தரும் அயோத்தி மாநகர்
இமிழிசை வாயில்விட் டேகும் அப்படை
கமழ்தரு துழாய்மதுக் கண்ணி யான்நுகர்ந்
துமிழ்தரும் உலகினை ஒத்த தாம்அரோ.

அமிழ்தினும் நுகர்தரும் அயோத்தி-(உண்பார்க்கு) அமிழ்த(ம் தரும் இன்ப) த்தினும் அதிகமான இன்பத்தை (க் காண்பார்க்கு)த் தருகின்ற அயோத்தி. இமிழ் இசை - (நகரின் உள்ளும் புறமும் செல்வார் பேசலால்) ஒலிக்கும் ஓசை. வாயில் - வாசல். துழாய் - துளசி. கண்ணியான் - மாலி கையுடையான் (திருமால்).

எதிர்த்துப் போராடின. இருபக்கத்துச் சேனைவீரரும் எய்த சரமாரிகள் கலந்து மழைமாரி போன்றன. கந்திருவர்சேனை மாய்ந்திடக்கண்டு, கந்திருவவேந்தர் வில்லைவளைத்து, அம்புகளை எய்துகொண்டு, தந்தேர்களைச் செலுத்தினார்கள். அதனைப் பரதன் கண்டு, 'கந்திருவர்களே! உங்கள் நால்வகைச்சேனையும் அழிந்ததை அறிந்திருந்தும் அறியாதார்போல்கிறீர்கள். சாவாமல் தப்பிப் பிழைத்திருப்பவர்கள் உழுதுண்டு வாழலாம். போங்கள்' என்று கூறிச்சிரித்தான். அவர்கள் 'நீ உன்மக்களோடு செத்திடுதல் நிச்சயம்' என்று செப்பினார்கள். அவன் 'என் மக்கள் இளையரென்று இகழாதீர்கள். யானைகள் கூட்டமாயிருந்தாலும் சிங்கக்குட்டிகளை எதிர்த்துப்பொருதல் இயலாது' என்று கூறி, வில்லைவளைத்து அம்புகளை எய்தான். அதனால் கந்திருவரின் நால்வகைச் சேனைகளும் நாசமடைந்தன. அதுகண்ட கந்திருவவேந்தர் வில்லைவளைத்துப் போர்புரிவாரானார்கள். அவர்கள் எய்த அம்புகளால், எதிர்ப்பக்கத்து வீரர்கள் தலைகளும் புயங்களும் அற்றன; குதிரைகள் கால்கள் துண்டிக்கப்பட்டன; யானைகள் கொம்புகளிழந்தன; தேர்களின் சக்கரங்கள் தூளாயின. பரதன் பொழிந்த சரமாரிக்குத் தப்பும்படி கந்திருவர் மலைக்குகைகள் முதலிய ஒளிப்பிடந்தேடி யோடினர். மூன்றுகோடிகந்திருவர் மாண்டனர். பரதன் தன்மக்கள் தக்க புட்கரர்க்கு வெற்றிமாலை சூட்டினான்

### பரதன் சிந்துநாட்டைக் கைப்பற்றி மக்களிருவருக்கும் அளித்தல்

பரதன், சிந்துநாட்டைக் கைப்பற்றி, இரண்டுபாகங்களாகப் பிரித்து, ஒரு பாகத்தில் தக்கசிலையென்னும் நகரைச் சமைத்து அதில் தக்கனும், இரண்டாம்பாகத்தில் புட்கரமென்னும் நகரை அமைத்து அதில் புட்கரனும் அரசர்கள் தொழ வீற்றிருந்து அரசாளும்படி செய்தான். பின்பு, அவன் திரும்பி அயோத்திக்குவந்து இராமனை அடிபணிந்து கந்திருவரைப் போர்செய்து தொலைத்ததையும் சிந்துநாட்டை இருபாகமாக்கி மக்களிருவர்க்கும் அளித்ததையும் தெரிவித்தான்.

௧௬-வது கந்திருவர்வதைப்படலம் முற்றிற்று.

[தொடரும்]

# அநுதாபக்குறிப்பு.

தமிழ்நாட்டிளைஞர் தமிழ்நூலறிவும் சைவசமயநூலறிவும் விழைந்து பெற்று ஆத்திகராய்விளங்கும்வண்ணம் பலபல பெரும் பரிசில்கள் வழங்க நிதியுதவிய பெருவண்மையுடையவர்களும், திருப்பனந்தாட் காசிமடத்துப் பத்தொன்பதாவது பட்டத்துத் தலைவர்களும் ஆன ஸ்ரீலஸ்ரீ சாமிநாதசுவாமிகள் சுபாநுஷூ பங்குனித்திங்கள் 13-ஆம்நாள் பரிபூரணமானமைகேட்டு வருந்துகிறோம். சுவாமிகள், சிறந்த கலாவிநோத ராகவும் காவியரசிகராகவும் கற்றோரையும் கற்போரையும் ஆதரித்து மகிழ் விப்பவராகவும் விளங்கினார்கள். இவர்கள் பிரிவு தமிழ்நாட்டுக்கு ஈடுசெய்ய முடியாத ஒரு பெருங்குறையாகும். இவர்கள் ஆன்மா இறைவனடிநிழலிற் சாந்தியடைக. இவர்களைப்பிரிந்த குறைதீர, இவர்களுக்குப்பின் திருப்பனந் தாட்காசிமடத்துத் தலைவர்களாகியிலகும் ஸ்ரீலஸ்ரீ அருணந்திசுவாமிகள், தமிழ்வளர்ச்சிக்கும் வைதிகசமயவளர்ச்சிக்கும் ஆவனசெய்து நீடுவாழ இறைவன் திருவருள்புரிக.

---

தஞ்சைமாநாட்டு நடுக்காவேரித் திரு. மு. வேங்கடசாமிநாட்டா ரவர்கள், இப் பங்குனித்திங்கள் 15-ஆம்நாள் இவ்வுலகவாழ்வை நீத்தமை தெரிந்து மிக்க துயரடைகிறோம். இவர், இம் மதுரைத்தமிழ்ச்சங்கத்துத் தனித்தமிழ்ப்பரீக்ஷைகள் மூன்றிலும் முதல்வகுப்பிற்றேறிப் பரிசும் பெற்ற வர்; திருச்சி எஸ். பி. ஜி. கல்லூரியிலும் அண்ணாமலை பல்கலைக்கழகத்திலும் கரந்தைத் தமிழ்ச்சங்கத்துப் புலவர்கல்லூரியிலும் தமிழாசிரியராயிருந்து பணியாற்றியவர்; மாணவர்களாலும் புலவர்களாலும் நன்குமதிக்கப்பெற்ற வர்; கவியியற்றுமாற்றலும் கட்டுரையெழுதும் வன்மையும் சொற்பொழி வாற்றுந்திறமும் உடையவர்; இம் மதுரைத் தமிழ்ச்சங்கத்துத் தனித்தமிழ்ப் பரீக்ஷைகளுக்குப் பலபலஆண்டுகள் பரீக்ஷகராயிருந்து உதவிபுரிந்தவர்; பல ஆராய்ச்சிக்கட்டுரைகளும் சிலப்பதிகாரவுரையும் எழுதியவர். இவரைப் பிரிந்துவருந்தும் இவர் குடும்பத்தார்க்கும் சுற்றத்தார்க்கும் நண்பர்க்கும் நமது அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

# ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதசுவாமிகளைப்பற்றிய நினைவுக்குறிப்புக்கள்

[ராவ்ஸாஹிப் ஸ்ரீ. வே. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள் G B.V.C.]

## சுவாமிகளுக்குக் கம்பராமாயணசாரத்தை உரிமையாக்கிய வரலாறு.

கம்பராமாயணத்தில் தேர்ந்தெடுத்த சிறந்த கவித்துவம்நிறைந்த இனியகவிகளும் அவைகளின் விளக்கவுரையும் முன்பின் கதைத் தொடர்ச்சியும் அடங்கிய கம்பராமாயணசாரம் என்னும் நூல், சற்றுக்குறைய ஒரு கால்நூற்றாண்டுக்குமுன் தொடங்கப்பெற்றுப் பகுதிபகுதியாக மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் 'செந்தமிழ்'ப்பத்திரிகையில் வெளியாகிவருவது. முதலைந்து காண்டங்கள் புத்தகரூபமாகப் பதிப்பிக்கப்பெற்றிருக்கின்றன. ஆறுங்காண்டம் 'செந்தமி'ழில் வெளியாகியிருக்கிறது; இன்னும் புத்தகரூபமாக அச்சிடப்படவில்லை.* ஏழாவது உத்தரகாண்டத்தின் பெரும்பகுதி செந்தமிழில் வெளியாகிவிட்டது. எஞ்சியபாகம் இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் வெளியாகி முடிந்துவிடும்நிலைமையிலிருக்கிறது. நிற்க.

நான் கம்பராமாயணசாரம் முதற்காண்டமாகிய பாலகாண்டத்தைப்புத்தகரூபமாகப்பதிப்பிக்கக் கருதிக்கொண்டிருந்தபோது,

---

* முதலாவது பாலகாண்டப்பிரதிகள் செலவாய்விட்டன. பிந்திய நான்குகாண்டங்களின் பிரதிகள் தென்னிந்திய சைவசித்தாந்தநூற்பதிப்புக் கழகத்தின் தலைமைநிலையமான திருநெல்வேலியிலும் கிளைநிலையமான சென்னையிலும் கிடைக்கும்.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதசுவாமிகள், தமிழ்வளர்ச்சியின் பொருட்டுச் சென்னைப் பல்கலைக்கழகத்தார் ஆண்டுதோறும் நடத்தி வரும் வித்துவான்பரீட்சையில் முதல்வராகத் தேர்பவருக்கு ஆயிரம் ரூபாய் பரிசு அளிக்க ஏற்பாடுசெய்திருந்ததைத் தெரியலானேன்.* அது என் மனத்திற் பெருமகிழ்ச்சியை உண்டாக்கியது. தமிழ்வளர்ச்சியில் சுவாமிகள் காட்டிய அன்பும் ஆதரவும் நன்றியுணர்வை உண்டாக்கின. அந்த மகிழ்ச்சியையும் நன்றியுணர்வையும் தெரிவித்தற்காகக் கம்பராமாயணசார நூலைச் சுவாமிகளுக்கு உரிமையாக்க விரும்பினேன். அப்போது சுவாமிகளை நேரில் அறியேனாதலால், ஸ்ரீமத். மகாமகோபாத்தியாய டாக்டர். சாமிநாதையரவர்களுக்கு எழுதிக் கம்பராமாயணசாரத்தைச் சுவாமிகளுக்கு உரிமையாக்குதற்கு அவர்கள் அநுமதியைப் பெற்றுத்தரவேண்டுமென்று வேண்டிக்கொண்டேன். ஐயரவர்கள் அவ்வாறு செய்து உதவினார்கள். கம்பராமாயணசாரம் பாலகாண்டம் அச்சிட்டு முடிந்தபோது, கம்பராமாயணசார முழுநூலையும் சுவாமிகளுக்கு உரிமையாக்கிய உரிமையுரையை முகப்பில் உடைய பாலகாண்டப் பிரதிகளிரண்டைச் சுவாமிகளுக்கு அடியுறை (=பாதகாணிக்கை) யாகத் தபால்வாயிலாகச் சமர்ப்பித்தேன். உடனே எனக்கு ஆயிரம் ரூபாய் சம்மானமாக அனுப்பியருளினார்கள்.

அந்தச் சம்மானத்தைப் பெற்றபோது, அதைப் பாலகாண்டப் பதிப்புச்செலவுக்கும், அடுத்த அயோத்தியாகாண்டப்பதிப்புச் செலவுக்கும் உபயோகித்துக்கொள்வதாகச் சுவாமிகளுக்கு விண்ணப்பித்தேன். அவர்கள், முன் ஆயிரம் ரூபாய் சம்மானித்திருப்பதல்லாமல் அப்போது செந்தமிழில் வெளியாகி முடிவாகியிருந்த ஆரணியகாண்டம், கிஷ்கிந்தாகாண்டம், சுந்தரகாண்டம் ஆகிய மூன்றுகாண்டங்களும் பதிப்பித்தற்கு ஆயிரத்தைந்நூறு ரூபாய் உதவுவதாகவும் தமிழ்நாட்டு நூல்நிலையங்களுக்கெல்லாம் அனுப்புவதற்காக ஒவ்வொரு காண்டத்திலும் ஐந்நூறுபிரதிகள் கட்டடம்

---

* இதன்பின், சுவாமிகள், தமிழ்வளர்ச்சிக்காகப் பலலட்சம் செலவிட்டு நிலையான பல சிறந்த ஏற்பாடுகள் செய்திருப்பது, தமிழுலகமுழுதும் நன்கறிந்தது.

(—பைண்டிங்) செய்யாமல் அனுப்பவேண்டுமென்றும் தெரிவித்தார்கள். சுவாமிகள்கருத்துப்படி ஒவ்வொரு காண்டத்திலும் ஐந்நூறுபிரதிகள் அனுப்பினேன். மூன்று, நான்கு ஐந்தாவது காண்டங்களின் பதிப்பிற்காக முன்வாக்களித்தருளியபடி ஆயிரத்தைந்நூறுரூபாய் அனுப்பப்பெற்றேன். சுவாமிகளுக்கு அனுப்பிய பிரதிகளைக் கட்டடஞ்செய்யாமல் அனுப்பவேண்டுமென்றதன் நோக்கம், கம்பராமாயணசாரம் எழுகாண்டங்களும் புத்தகமாக அச்சிடுதல் முடிந்தபோது எழுகாண்டங்களும் அடங்கிய புத்தகங்களாகக் கட்டுவித்து, அந்தப் புத்தகங்களைத் தமிழ்நாட்டு நூல்நிலையங்களுக்குச் சுவாமிகள் அனுப்பக்கருதியிருந்தார்களென்று ஊகித்துக்கொண்டேன்.

## தரிசனமும் சல்லாபமும்

கம்பராமாயணசாரம் முதலைந்துகாண்டங்களையும் புத்தகரூபமாகப் பதிப்பித்துவெளிப்படுத்தியபின்பு, சுவாமிகளுக்கு என் நன்றியுணர்ச்சியை நேரில் தெரிவிப்பதற்குவிரும்பி, நான் திருப்பனந்தாளுக்குப் போகப் புறப்பட்டபோது, என்பால் பேரன்பும் பெருமதிப்பும் உடைய வித்துவநண்பர் திருவாளர். தொ. மு. பாஸ்கரத்தொண்டைமான் அவர்கள் M.A. (First class Magistrate, Tinnevelly) என்னுடன்புறப்பட்டுக் கண்ணை இமைகாத்தல் போல எனக்கு எவ்வித அசௌகரியமும் நேராமல் பார்த்துக்கொண்டு ஆதரவான துணையாக வந்தார்கள். நாங்கள் திருப்புடைமருதூரில் தங்கியிருந்தபொழுதே எங்கள் வருகையை அறிந்து சுவாமிகள் எங்கள் பிரயாணத்திற்குவேண்டும் வசதிகளையெல்லாம் உதவியருளினார்கள். நாங்களிருவரும் திருப்பனந்தாளையடைந்து சுவாமிகளைத் தரிசித்தபோது சுவாமிகள் கம்பராமாயணசாரத்தில் தங்களுக்கு விசேட உவகையளித்த பகுதிகளை எடுத்துக்கூறிப் பாராட்டித் தாங்கள் நெடுங்காலமாகச் செய்திருந்த கம்பராமாயண ஆராய்ச்சியினுற்கண்டுபிடித்த புதுமையும் அருமையும் இனிமையும் ஆன பகுதிகளை இனிது எடுத்துக்கூறி விளங்கச்செய்தார்கள்.

## பரமசௌலப்பியகுணம்
(எளிமைச்சிறப்பு)

அப்போது திடீரென 'நீங்கள்வந்து என்னைப்பார்க்குமுன் நான்வந்து உங்களைப் பார்க்க எண்ணியிருந்தேன்' என்று சொல்லியருளினார்கள். உடனே 'என் சிறுமை எங்கே! இவர்கள் பெருமை எங்கே!! இரண்டுக்குமுள்ள வித்தியாசம் அசககசாந்தரம் (ஆட்டுக்கும் ஆனைக்குமுள்ள வித்தியாசம்) ஆயிற்றே!!!' என்று என்மனத்துள்ளே நான் கூறிக்கொண்டதை என் முகக்குறிப்பினால் அறிந்து சுவாமிகள் 'நான் சொல்லியது முற்றிலும் உண்மை. மற்ற மடாதிபதிகள்போல நான் ரயிலில் பிரயாணம்செய்தல் கூடாது என்று என்னைக் கட்டுப்படுத்திக்கொள்ளவில்லை. விரும்பினால் ஒரு பூசைத் தவசிப்பிள்ளை, ஒரு சமையற்றவசிப்பிள்ளையுடன் புறப்பட்டு எங்கு வேண்டுமானாலும் போய்வரலாம்' என்றுகூறியருளினார்கள்.

## கம்பராமாயணசாரத்தைத் தமிழ்நாடுமுழுவதிலும் பரவச்செய்யும் விருப்பு.

சுவாமிகள், 'கம்பராமாயணசாரம் ஏழுகாண்டங்களையும் ஒரு புத்தகமாகவும் மிகப்பலவான பிரதிகளுடையதாகவும் பதிப்பித்து, அடக்கவிலைக்குக் காற்பங்குவிலை ஏற்படுத்தி, எங்கும் ஏராளமாக விற்றுப் பரவச்செய்யவேண்டுமென்பது என்விருப்பம். காற்பங்கு விலை ஏற்படுத்துவதன் நோக்கம், பதிப்புச்செலவில் ஒரு பகுதிக்கு ஈடுசெய்யவேண்டுமென்பதன்று; மற்றெதற்காகவென்றால், விலையேயில்லாத எந்தப்பொருளுக்கும் மதிப்பிராதென்பதற்காக' என்று கூறியருளினார்கள்.

## அடுத்தவர்கள் நன்மையை அன்புடன் கவனித்து ஆவனசெய்தல்.

சுவாமிகள் திருப்பனந்தாளுக்கு என்னுடன் வந்திருந்த என் தவசிப்பிள்ளை என்னிடம் நெடுங்காலமாக உண்மையாக வேலை பார்த்துவருபவன் என்பதை விசாரித்துத்தெரிந்து அவனைத் தங்கள்முன் வருவித்துத் தக்க பொருளுதவி, அவன் மேலும்

மேலும் எனக்கு அன்புடன் பணிசெய்துவரும்படி ஊக்கியருளி னார்கள். அவர்கள் 'கண்ணிற்சொலிச் செவியின் நோக்கும் இறை மாட்சி' உடையவர்கள் என்பதை நான் அன்று கண்டறிந்தேன்.

## சுவாமிகள் பரிபூரணமானமை

புறவிருளையோட்டும் வானப்பெருஞ்சோதியான சூரியன், எல்லாரும் எதிர்பாராத இருளில் முழுகும்படி, மத்தியான (பகற்) காலத்தில் (-நடுப்பகலில்) மறைவானாற்போல (அத்தமித்தாற் போல), அகவிருளையோட்டும் ஞானப்பரஞ்சோதியான சுவாமிகள், அனைவரும் கனவிலும் நினையாத துக்கத்திலழுந்தும்படி, மத்தியான (ஆயுட்) காலத்தில் (நடுவயசில்) மறைவானது (-பரிபூர்ண மானது) தமிழர் செய்த தவக்குறையென்று கூறுவதன்றி வேறு யாதும் கூறுதற்கில்லை.

## இப்போதைய திருப்பனந்தாள் மடத்துத் தலைவரவர்கள்

இப்போது திருப்பனந்தாள்மடத்துத்தலைவரவர்களாக வீற் றிருக்கும் ஸ்ரீலஸ்ரீ. காசிவாசி அருணந்திசுவாமிகளை, அவர்கள் பூர்வாசிரமத்தில் (துறவியாகுமுன்) சொந்தஊரான திருநெல்வேலி ஜில்லா அம்பாசமுத்திரம் தாலுகா அரியநாயகிபுரத்தில் அவர் கள் இல்லத்தில் ஒருமுறை கண்டு பேசியிருக்கிறேன். இருபது வயசுக்குட்பட்டவர்களாயிருந்த அப்போது, அவர்களுடைய தமிழ்ப்படிப்பின் முதிர்ச்சியையும் அவர்களுக்கு அப்படிப்பில் இருந்த ஆர்வத்தையும் தெரிந்து மகிழ்ந்திருக்கிறேன்.

அவர்கள், தமிழ்நாடு எல்லாத்துறைகளிலும் மறுமலர்ச்சி (-புனருத்தாரணம்-Remaisance) அடையும்படி தமிழரின் வறு மையும் அறியாமையும் நீங்கியொழியவும் செல்வமும் கல்வியும் ஓங்கிவளரவும் வேண்டுவனசெய்து நீண்டஆயுளும் நோயற்ற உறுதியான உடல்நலமும் மற்றெல்லா நலங்களும் எய்தி இனிது வாழும்வண்ணம் திருவருள்புரிந்தருளும்படி இறைவனை வணங்கி வேண்டிக்கொள்கின்றேன்.

# பண்டைத் தமிழர்

சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர்.

(கசO-ஆம் பக்கத் தொடர்ச்சி)

## கல் மர விலங்குகளின் வழிபாடு.

மத்தியதரைக்கடலைச் சார்ந்த நாடுகளிலிருந்தோர் கல்மரவிலங்குகளை வழிபட்டபடியே தமிழரும் வழிபட்டனர் என்பது சிந்துவெளிப்பட்டணங்களின் புதைபொருள்களால் நன்கு நிச்சயிக்கப்படுகின்றது. மொஹெஞ்சோதரோவிலும் ஹரப்பாவிலும் மூன்றுவகையான கற்கள் வெளிப்பட்டன. ஒருவகை நன்குய்ச்செதுக்கப்பட்ட இலிங்கங்களும் யோனிகளும். இவற்றுட் சில காப்பின்பொருட்டோ, அதிட்டத்தின்பொருட்டோ கழுத்திலே தரித்தற்கு வழங்கின. பபிலோனியாவிலும் ஒரு காலம் இலிங்கம் காப்பாகத் தரிக்கப்பட்டது. இந்தியாவில் இவ்வழக்கம் இன்றைக்கும் காணப்படும். வேறு ஒருவகை விண்வீழ்கற்களைப்போலச் செய்யப்பட்டன. இன்னும் ஒருவகை மோதிரவடிவானவை. இன்றைக்கும் இந்தியாவில் சாலக்கிராமம் விட்டுணுவின் இருப்பிடமாகவும் லிங்கயோனிகள் சிவனுக்கும் மகாதேவிக்கும் குறிப்பாகவும் வழங்குகின்றன. சில கற்கள் இயற்கையில் உள்ளபடியே (சுயம்பு) வழிபாடு அடையும். சில பருமபடியாயேனும் அழுத்தமாயேனும் உருப்படுத்தி வழங்கப்படும். இவற்றை ஒத்தவை பலுச்சிஸ்தானத்திலும் கண்டெடுக்கப்பட்டன.* வானத்திலிருந்து விழுந்தனவாகக் கருதப்பட்ட சில கற்கள் மேற்கு ஆசியாவில் வழிபாடு அடைந்தமை பிரசித்தம். கற்றூண்களை வழிபடும் வழக்கமும் மத்தியதரைக்கடலை அண்டின சாதிகளுளெல்லாம் பூர்வகாலத்தில் இருந்தது. செமித்திய குலங்களின் மஷெபா கற்றூண்களை நோக்குக. பினிசியருடைய கிபெலே தெய்வம் மனுரூபமாகச் செய்யப்பட்ட போதிலும், அதன் தலை கற்றூணின் உச்சிலயப்போலக் குவிந்தபடி வெட்டப்பட்டது. இந்தியாவின் தற்கால இலிங்கத்தூண்கள் பழைய இலிங்க உருவத்தையும் கற்றூண் உருவத்தையும் ஒருங்குகொண்டிருக்கின்றனபோலும். கந்து கந்தழி எனும் மரக்கட்டைகளின் உற்பத்தியும் இதுவேயாகலாம்.

மோதிரவடிவமைந்த சிறிதும் பெரிதுமான கற்கள் சீவஉற்பத்திக்கு அடையாளமாகவும் சுபாவத்துக்கு மேலான வல்லமையுள்ளனவாகவும்

* Marshall op cit I. p. 59.

பாவிக்கப்பட்டனவாகத் தோன்றும். மொஹெஞ்சோதரோவிலும் ஹரப்பாவிலும் அரைஅங்குலம் முதல் காலடிவரையும் குறுக்களவுள்ள துளைக்கற்கள் கண்டெடுக்கப்பட்டன. சிறிய துளைக்கற்கள் நேர்த்திக்கடனாகவோ விரலில் அணியவோ வழங்கியிருக்கலாம். பெரியன வழிபாட்டிற்குரியனபோலும். தற்காலம் பம்பாய்க்கணிமையிலுள்ள ஓர் சிற்றூரில் சிரீகுண்டி மோதிரக் கல்லினூடு நுழைந்துபோவோருடைய பாவங்கள் விமோசனமாகும் என்பது சனங்களின் நம்பிக்கை. சத்துருஞ்சய எனும் இடத்திலுள்ள துளைக்கல்லும் பேர்போனது. அதன் துளைக்கு முத்திதுவாரம் என்று பெயர். சாக்தருடைய சிரீசக்கரமும் புத்தருடைய தர்மசக்கரமும் இதைக்கண்டு பாவிக்கின்றன என்பது சிலரது அபிமதம்.

மரவழிபாடும் மத்தியதரைக்குலங்களிடத்திலேயும் பழைய இந்தியக் குடிகளிடத்திலேயும் ஒன்றாகத் துலங்குகின்றது. சிலமரங்கள் தெய்வத் தன்மையுள்ளவை அல்லது தெய்வங்களுக்கு உறைவிடமானவை எனும் கொள்கை மத்தியதரைக்குலங்களுள்ளேயே எழுந்தது என்ப. ஆரியர் முதலான பிறகுலங்கள் அதைத் தமக்குமுன் இருந்த மத்தியதரைக்குலங்களிடத்திலிருந்து பெற்று அருமையாகக் கையாடினபோலும். இதற்கு "பொடோனாவில் சேயுசுடைய ஓக்மரத்தையும், ஒலிம்பியாவில் அத்தெய்வத்தின் காட்டிலுப்பையையும், டெல்பியில் அப்பொல்லோவின் பே மரத்தையும் எபேசு நகரில் அர்த்தேமிசின் ஓக் மரத்தையும், நேமியில் தியானாவின் மரத்தையும்" சர் ஜான் மார்ஷல் எடுத்துக்காட்டாகக் குறிக்கின்றார்.* சிந்துவெளியார் அக்காலம் மரங்களை வழிபட்டதற்கு அவர்களுடைய அழிந்த பட்டணங்களிற் போதிய சான்று உண்டு. ஒரு சித்திரத்தில் † அரசமரமொன்றில் தெய்வம் வெளிப்படுவதுபோலவும், அதை ஒரு தொண்டன் ஒற்றைமுழந்தாளிட்டு வணங்குவதுபோலவும் காட்டியிருக்கிறது. தெய்வத்தின் நெடுங்கூந்தல்கொண்ட தலைமேல் திரிசூலவடிவமான கொம்புகள்; கைகளில் வளையல்கள்; தொண்டன் தலையிலும் திரிசூலக்கொம்பு; கொம்புகளுக்கிடையில் ஒரு இலை அல்லது இறகு; கையில் வளையல்கள்; தெய்வத்துக்குப்போலத் தொண்டனுக்கும் நெடுங்கூந்தல்; அதற்குப்போல் இவனுக்கும் உடையில்லை; இவன்பக்கத்தில் மனுஷமுகமுள்ள ஒரு மிருகம் நிற்கின்றது. இது இவனுக்கு உதவிசெய்ய ஏற்பட்ட ஓர் அரைத்தெய்வமாகலாம். இவன் முட்டிட்டிருக்கும் இடத்தின் முன்னால் முழங்கால்வரையும் உடையணிந்த ஏழு உருவங்கள் நெடுங்கூந்தலோடு நிற்கின்றன. தலையில் தழையோ

* Ibid I 65, † Marshall plate XII Fig. 18.

இறகோ சூடிய இவ்விகள் பூசாரிப்பெண்களாகலாம் என்பர் சர் ஜான் மார்ஷல்.* காபீர்ஸ்தானில் சிலி எனும் மரத்தை வழிபடும் பூசாரிகள் இன்றைக்கும் தலையிலே தழைசூடுவர். நமது சித்திரத்திலே மரத்தில் நிற்பது ஓர் பெண் தெய்வமாகலாம் என சர் ஜான் கருத, அது "ஆண்" எனும் தெய்வமே எனவும் மனுஷமுகமுள்ள மிருகம் ஆடும் மீனும் (மேடமும் மீனமும்) சேர்ந்து "ஆண்" தெய்வத்துக்கே குறிப்பாகும் எனவும் ஹிறஸ் சுவாமியார் மொழிவர்.† அரசமரத்திலே தெய்வம் உறையும் என்று நம்பினோர், பின் அம்மரமும் தெய்விகமானது எனக்கொள்வோரானார்போலும். சிந்துவெளிமக்களுள் இருந்த அரசமரவழிபாடு பின்னாளில் இந்தியாவிலே நன்றாய்த் தடித்துநிற்பதாயிற்று. கௌதமபுத்தர் அரசமரத்தின்கீழ் நிரம்பிய அறிவடைந்தார் என்பதனால் பௌத்தர்கள் அம்மரத்தை வழிபடுவதன்று, முன்தொட்டு அரசு அறிவுதரும் மரமாய் ஆராதனம் அடைந்திருந்தது என்பதே உண்மைவரலாறும். மெசொப்பொத்தாமியாவில் அறிவுதரும் மரத்தைப்பற்றிய கதை பூர்வம் தொட்டு உள்ளது. எபிரேயரது விவிலியத்திலும் அதனைக் காண்கிறோம். கல்தேயருடைய கேதுருமரம் அறிவுமட்டுமல்ல, உயிரும் தருவதாக எண்ணப்பட்டது. அதன் உள் வயிரத்தில் ஞானத்தின் தெய்வமாகிய எயாவின் நாமம் வரையப்பட்டிருந்ததாக அன்னோர் எண்ணினார்கள்.

மொஹெஞ்சோதரோவிலும் ஹறப்பாவிலும் சித்திரங்களில் தேவவழிபாடுபெற்ற வேறு மரங்களும் குறிக்கப்பட்டுள்ளன. சில மரங்கள் வழிபாட்டுக்குரியன எனக் காட்டுவதற்குப்போலும் அவைகளைச் சூழ ஒரு குட்டிச்சுவர் அல்லது வேலி வரைந்திருக்கிறது. பலூற்காஞ்சி ஆதிய இடங்களின் பிற்காலச்சித்திரங்களிலும் இவ்வகைஅடைப்புக்களைக் காண்கின்றோம். பின்னாளில் வழிபாட்டிற்குரிய யக்ஷி அல்லது முனி சிறுதெய்வங்களாய் வந்திட்ட போதிலும், முன்னாளின் மரத்தெய்வங்கள் பெரியவைகளேயாய் நிலைத்தன. ஆரியர் இங்கு வந்திறங்கியபின்னே பெரியதெய்வங்கள் சிறியனவாயின போலும். இவ்வாறுதான் மத்தியதரைத்தேசங்களிலும் ஆதிநாளிலிருந்த மரவழிபாடு, பின்னர்க் குடிகொண்ட ஆரியரின்கீழ் அருகலுற்றது. ஆயினும் ஆரியக்கலப்பு அதிகம் கொள்ளாத தென்னிந்தியாவிலே மரவழிபாடு இன்றைக்கும் ஊரத்துநிற்கின்றது. அரசும் துளசியும் இன்றைக்கும் முக்கிய வழிபாடு அடைகின்றன. கன்னியைக் கணவன் சேருமுன் அவளை ஒரு மரத்துக்கு விவாகஞ்செய்துவைக்கும் வழக்கம் மரங்களின் தெய்வத்தன்மைக் கொள்கைக்கு ஒரு சாட்சி. ஒருமரத்தை வேறோர்மரத்துக்கு மணம்முடிக்கும்

* Marshall I p. 64. † Sardesi Commemoration Volume p. 339.

வழக்கமும் இருக்கின்றது. அரசைச்சுற்றி வேம்பைப்படரச்செய்திருப்பதைப் பலவிடங்களிற் காணலாம். துளசிச்செடிக்குச் சாலக்கிராமத்தை ஆண்டு தோறும் விவாகபந்தனமாக்கும் சடங்கு இன்றைக்கும் மிகு ஆடம்பரமாய் நடப்பதுண்டு.

இனி, பண்டைக்கால மத்தியதரைக் குலங்களுக்குள்ளேதான் மிருக வழிபாடு மிகத்தடித்து விளங்கியது எனல் ஆராய்ச்சியாளர்க்கெல்லாம் ஒத்த முடிபு. கி. மு. நாலாயிரம் வருஷம்வரையில் எட்டுகின்ற சரித்திரச்சாசனங் களைக்கொண்டுள்ளோராகிய எகிப்தியர் இதற்கு நற்சான்று. மெம்பிசில் அபிஸ் எனவும் எலியோப்பொலிசில் மினெவிஸ் எனவும் பெயரிடப்பட்ட எருது அவர்களுள் முக்கிய தெய்வத்தன்மையுள்ளதாய் ஓசிறிஸ் தெய்வத் தின் அவதாரமாய்ப் போற்றப்பட்டது. எருதைப்போலவே மென்டெசில் வெள்ளாடும், மேறிஸ்வாவியில் முதலையும், லெயொன்தொப்பொலிசில் சிங்க மும் பூச்சியமாய்க்காத்து விசேஷ பணிவிடையாளரால் உணவூட்டி விழாக் கொண்டாட்டங்களோடு தொழப்பட்டன. இவையன்றி அனுபிஸ் எனும் நாய் ஓசிறிசுக்கும் ஈசிசுக்கும் காவலாளியான தெய்வமாகவும், கீரி முதலை முட்டைகளைத் தொலைக்கும் தெய்வமாகவும், பூனை விஷசெந்துக்களை அழிக்குந் தெய்வமாகவும் போற்றப்பட்டன. ஸ்கறபே எனும் வண்டும் வல்லூறும் கழுகும் அவ்வாறே வழிபாடடைந்தன. பல தெய்வங்கள் மனிதத்தலையுள்ள மிருகங்களாயும், வேறுபலதெய்வங்கள் மிருகத்தலையுள்ள மனுஷ உருவங்களாயும் இருந்தன. மெசொப்பொத்தாமியாவில் வழிபா டடைந்த மனுஷத்தலையுள்ள சிங்கத்தையும் இங்கே குறிக்கத்தகும்.

பூர்வ இந்தியாவின் விலங்குவழிபாட்டுக்கு மொஹெஞ்சோதரோவிலும் ஹரப்பாவிலும் ஐயந்திரிபற்ற சாட்சி காணப்படுகின்றது. அங்கேகிடைத்த சித்திரங்களில் இயற்கையும் செயற்கையுமான பல மிருகங்கள் விளங்கு கின்றன. செயற்கைமிருகங்கள் மனிதமுகமும் ஆடு மாடு முதலிய மிருகங் களின் உடலுமாய்க் கற்பிக்கப்பட்டவை. மூன்று மிருகங்கள் ஒன்றானவை யும் சில காணப்படுகின்றன. முழுதும் மனக்கற்பிதமான சில மிருகங்கள், பலவித கொம்புகளும் அவயவங்களும் கொண்டன. இவற்றுள் ஒன்று மூன்று புலிகள் இணைந்த மேரையாய்ச் செய்திருக்கிறது. வேறொன்று மாட்டின் உடலைப்படைத்த கொம்புள்ள மனிதன் ஒருவன் கொம்புள்ள புலியொன்றைப் பொருகின்றபாவனை. இது சுமேரியாவிலே கண்டெடுத்த ஒரு சித்திரத்தை மிகவும் ஒத்தது. அதில் கில்கமெஷ் என்பவனோடு போராடும்பொருட்டு எயாபனி அல்லது என்கிடு எனும் பாதி மாட்டுருவமானவனை அருரு எனும்

பெண்தெய்வம் படைத்தனள் என்றும், பின்பு கில்கமெஷ் எயாபனியோடு கூடி வனவிலங்குகளுக்கெதிராய்ச் சமர்செய்தான் என்றும் சொல்லியிருக்கிறது. இந்தக் கதை சுமேரியாவுக்கு இந்தியாவிலிருந்து போயிற்றோ அன்றி அங்கிருந்து இங்கு வந்ததோ எனத் துணியக்கூடாமல் இருக்கிறது.*

செயற்கையோ இயற்கையோ என்று நிச்சயிக்கக்கூடாத காண்டா மிருகம்போன்ற ஒற்றைக்கொம்பன் ஒன்று தீபதூபங்களோடு தொழப்பட்டதாகப் பல சித்திரங்கள் காட்டுகின்றன. இம்மிருகத்தின் முதுகில் சேணம் போன்ற ஒன்றும், பலமுறை கழுத்தில் முன்விரித்த "ஆண்" தெய்வத்தின் கைவளையல்கள் போன்றவைகளின் வரிசையும் காணப்படுகின்றன. தூபக் கலசமும் ஒரு வழிபாட்டுப்பொருளாய்வந்திருந்ததுபோலும் அக்கலசமும் மாட்டின் விக்கிரகமும் வேறு சில ஆரானதப் பொருள்களும் ஊர்வலமாய்க் கொண்டுபோகப்படும் காட்சி ஒரு சித்திரத்தில் வரைந்திருக்கிறது.† இலாஞ்சனைகளையும் கொடிகளையும் இவ்வாறு கொண்டுபோகும் வழக்கம் எகிப்திலும் இருந்தது.

இயற்கையான மிருகங்களுள் எருது, திமிலற்ற குறுங்கொம்பன், காண்டாமிருகம், காட்டா, எருமை, யானை எனும் இவைகள் சிந்துவெளி மக்களால் தொழுதுகொள்ளப்பட்டன. சித்திரங்களில் இவற்றின் முகதாவில் இட்டிருக்கும் தொட்டி இவற்றிற்குப் படைக்கும் திருவமுதை விளக்கும் என்பர். இவற்றைத்தவிர முத்திரைகளிலும் ஓடுகளிலும் பொறித்திருக்கின்ற நாய், காட்டுப்பன்றி, ஆடு, குரங்கு காடி, முயல், அணில் என்பனவும் கிளியாதிய பட்சிகளும் ஓரோர்வகையில் வணக்கத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் எனத் தோன்றுகின்றது. இவை நேரே வழிபாடு அடையாவிடினும்காவற்பொருள்களாய்வழங்கியிருக்கலாம். முந்திய மிருகங்களோ தெய்வமாகப் போற்றப்பட்டமைக்கு இன்றுவரையில் சான்று கிடைக்கின்றது. திமிலுள்ளதும் அற்றதுமான எருது இன்றைக்கும் சிவபிரானின் ஊர்தியாகவும் சிவாலயங்களின் நந்திதேவராகவும் வழங்கப்படும். விருஷபோத்சர்ச்சனம் எனும் சடங்கில் எருதுக்குச் சூலக்குறிபோட்டுவிடுதல் அது மறுலோகத்தில் இறந்தவனுக்கு வாகனமாகும் என்பதற்காக என்பர். எருது சிலவேளை காவற்றெய்வமாகவும் சிலவேளை பயங்கரமுள்ள புயற்றெய்வமாகவும் கிழைத்தேசங்களிலெல்லாம் வழிபாடடைந்துள்ளது. மொஹெஞ்சோதரோவிலும் ஹரப்பாவிலும் பலுச்சிஸ்தானிலும் திரளான செங்கல்

* Marshall, I 67. † Marshall op. cif , plate 116, fig, 5,6.

மாட்டுருவங்கள் கிடைத்தன. மட்கலங்களிலும் அவ்வுருவங்கள் மிகப் பொறிக்கப்பட்டிருந்தன. இசிஸின் அவதாரம் என்று எறொடோற்றூஸ் குறித்திருக்கின்ற இயோ எனும் பசுவேளாண்மையின் தெய்வமாக மத்தியதரைக்குலங்களுள் மிகவழிபாடு அடைந்ததுபோல்* தற்காலம் இந்தியாவில் பசுவே அதிக ஆராதனத்துக்குரியதாகின்றது. அது சகல தேவர்களுக்கும் உறைவிடமானது எனும் கொள்கையைச் சிவதருமோத்தரத்தின் கோபுரவியலிற் காணலாம். புலி இன்றைக்கும் மகாதேவிக்கு வாகனமாம். அந்த அம்மை தன் உக்கிரரூபம் ஒன்றிலே பெண்புலியாய் அவதரித்தாள் என்றதும் ஐதிகம். காண்டாமிருகமும் காட்டாவும் பலவிடங்களில் மறந்துவிடப்பட்டிருந்தும், லோட்டாகர்கள் தங்கள் வயல்கள் செழிப்புறச்செய்யும்பொருட்டுக் காண்டாமிருக எலும்புத்துண்டுகளைப் புதைப்பது நோக்கத்தக்கது. எருமையை யமனின் வாகனமெனவைத்துப் பத்தியுள்ள இந்துக்கள் அதனை உழவுக்கோ வண்டி இழுத்தற்கோ உபயோகப்படுத்தார்கள். மஹிஷாசுரன் (எருமைப் பகைவன்) என்பவனைத் தேவி கொன்றதன்நிமித்தம் அவளுக்கு எருமைப்பலி கொடுக்கப்படும் என்பர். இப்பலி நரபலிக்குப் பதிலாக வந்ததுபோலும். ஹேரம்பகணபதியிலும் இவ் வழிபாட்டைக் காண்க. ஹேரம்ப எனும் வடசொல் எருமை எனும் தமிழ்ச்சொல்லேயாம். பூமாதேவி (=மகாதேவி) ஒருகால் யானையுருவங்கொண்டாள் எனும் எண்ணம் சில இந்துக்களுள் இருக்கின்றது. ஆரியர் யானையை இந்திரன்வாகனமாகிய ஐராவதம் ஆக்கினர். யானைவழிபாடு தென்னிந்தியாவில் நடந்ததற்குப் போதிய சான்று உண்டு. நாய் தற்காலம் வயிரவருடைய வாகனமாக வழிபாடு அடையும். பில்லர் அதைத் தனித்தெய்வமாகப் போற்றுவார்கள். அதன் இறைச்சியை இராசபுத்தர் ஒரு சமயவழிபாடாக உண்ணுவர். காட்டுப்பன்றி கௌரிக்குப் பதிலாக வணக்கம் அடையும். விட்டுணுவின் வராக அவதாரத்தையும் நோக்குக. ஆட்டைச் சில இடையர்களே இந்நாளில் வழிபடுவார்கள். அது ஒருகாலம் அடைந்திருந்தமேன்மையைக் கந்தபுராணத்தின் தகரேறுபடலத்தினால் உய்த்துணரலாம். ஆட்டுக்கடாவின் கொம்பு ஆலயங்களிலும் இல்லங்களிலும் காப்பாகத் தூக்கிவிடப்படுவதையும் நோக்குக. காடியும் மூயலும் மந்திரசித்தி உள்ளன எனக் கருதப்படினும் இந்நாளில் வழிபாடடையக் காணேம்.

---

* Charles Antran op. cit p. 122.

நாகவழிபாட்டிற்குச் சிந்துவெளிப் பழம்பொருள்களில் உறுதியான சான்று தோன்றவில்லை. அவைகளில் பாம்பு மனுஷனைப்போன்ற உருவங் கொண்டிருத்தலையே காண்கின்றோம்.* ஆயின் மத்தியதரைக்குலங்களுள் அவ்வழிபாடு விசேஷம் பெற்றிருந்தது என்பதில் மயக்கம் இல்லை. அக்கத்தியருள் தலைமைபடைத்த எயா எனும் தெய்வம் எரிது எனும் அதன் முக்கியமானபதியிலே சர்ப்பவுருவில் வணங்கப்பட்டது. பூமாதேவிக்குக் குறிப்பாகக் கொள்ளப்பட்ட பாம்பே கல்தேயருடைய சமயத்துக்கும் சாதிக்கும் இலாஞ்சனையாயிருந்தது. கிரேத்தாதீவின் பெண்தெய்வத்தைப் பாம்பு சுற்றியிருக்கக் காணலாம். மேதியரும், சறதுஷ்டர்வழிபாட்டாளரான ஆரியரால் வெற்றிகொள்ளப்படுமுன், சர்ப்பவழிபாட்டாளராகவே இருந்தனர். ஆரியர் பின் சர்ப்பத்தைத் தங்கள் அங்கிரமைனியு எனும் தீமையின் தேவதையோடு ஒன்றுபடுத்திவைத்தார்கள்.† பரதகண்டத்துப் பழங்குடிகளுள் இன்றைக்கும் நாகவழிபாடு உரத்துநிற்றல் எடுத்துக்காட்ட வேண்டாதது. நாகர் என்னும் பண்டைக்குலத்தவரின் பெயரும், நாகபுரம் நாகர்கோயில் நாகத்தீவு ஆதிய இடப்பெயர்களும் அதற்குப் போதிய சான்று. சிவபிரானைச் சர்ப்பாபரணராகக் கூறுதலும் நோக்கத்தக்கது.

மிருகங்களோடு பறவைகளுள்ளும் சில வழிபாடு அடைந்தனவாகத் தோன்றும். பண்டைநாள் எகிப்தியர் ஆதியோருள்ளும் இவ்வணக்கம் காணப்பட்டது. இன்றைக்கும் மயில், கருடன் ஆதியன தமிழ்மக்களுட் பூசனை பெறுவது பிரசித்தம்.

இவற்றால் மத்தியதரைக்குலங்களுக்கும் பரதகண்டத்தின் பழங்குலங்களுக்கும் இடையில் ஒற்றுமை நன்றாக நிச்சயிக்கப்படும்.

---

* Marshall op. cit. pl. cxvi. 29. cxvii. 11 &ce.

† Z. A. Ragozin: Vedic Indra, p. 310

# 1944ஞு மார்ச்சுமீ 27உ (சுபானுஞு பங்குனிமீ 14உ) மாலை 5½மணிக்குக்கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

---

1. மகா-ா-ா-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L. M.L.C.
—உப-அக்கிராசனாதிபதி.

2. ,, மதுரமித்திரன் க. சுப்பிரமணியம் அவர்கள்

3. ,, N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள் B.A., B.L.
—காரியதரிசி.

4. ,, V. ஷண்முகசுந்தரம்பிள்ளையவர்கள் M.A., B.L.
—கூட்டுக்காரியதரிசி.

இவர்கள் வந்திருந்தார்கள்.

## தீர்மானங்கள்.

1. சங்கமாபீசு வரவு செலவு கணக்குகள் அங்கீகரிக்கலாயின.

2. இச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக்கோரிய கோயம்புத்தூர், Presentation Convent High School தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமதி. வித்வான் S. அலங்காரவல்லி B O L அவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

3. இவ்வாண்டு நடத்தப்பெற்ற சங்கப்பரீக்ஷைகள்சம்பந்தமாக எழுதிய ஆபீஸ் மெமோ ரிக்கார்டுசெய்யலாயிற்று.

4. சங்கத்தின் 1943-44-ம் வருஷத்திய வருஷாந்தக்கணக்குகளைப் பரிசோதனைசெய்யவேண்டுமென்று மதுரை வக்கீல் மகா-ா-ா-ஸ்ரீ R. சேஷையங்கார் B.A.,B.L., அவர்களைக் கேட்டுக்கொள்ளலாயிற்று.

5. 1944-45-ம் வருஷத்துக்குத் தயாரிக்கப்பெற்ற சங்கமாபீசு வரவு செலவு மதிப்புத்திட்டம் (Budget) அங்கீகரிக்கலாயிற்று.

6. சங்கக்கலாசாலை உபாத்தியாயர் ஸ்ரீ. K. சிவஞானம்பிள்ளை கேட்டுக்கொண்டபடி நான்குநாட்களுக்கு லீவு ஸ்பெஷல்கேஸாக சாங்கிஷன் செய்யலாயிற்று. ஷை ரஜாகாலத்துக்குரிய சம்பளத்தை ஷையாருக்குக் கொடுக்கும்படியும் தீர்மானிக்கலாயிற்று.

7. அன்னியதேசமாகிய Mauritiusல் உள்ள ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் லைப்ரேரிக்குச் செந்தமிழ்ப்பத்திரிகையை இனமாக அனுப்பிவரவேணுமென்றுகேட்டுக் கடிதம் வந்திருப்பதனால், ஷை இடத்துக்குப் புத்தகம் தபால்மூலம் அனுப்பலாமாவென்கிற விவரம் நிச்சயமாய்த் தெரிந்துகொள்ளவேணுமென்று தீர்மானிக்கலாயிற்று. விஷயம் அடுத்த மீட்டிங்குக்குத் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது.

T. C. ஸ்ரீநிவாஸையங்கார்,
உப-அக்கிராசனாதிபதி.

மதுரைத்தமிழ்ச்சங்கம்,
மதுரை.

27—3—'44.

---

# மதிப்புரை

---

சுவாமி வீரமாமுனிவர் நினைவுமலர்:—மதுரைக் கத்தோலிக்கு ஸேவா சங்கவெளியீடு T. 7. விலை ரூபா 1—12—0. இடைக்குமிடம்: கத்தோலிக்கு ஸேவாசங்கம், தல்லாகுளம் போஸ்டு, மதுரை.

வீரமாமுனிவர் இத்தாலிநாட்டினர்; லத்தீன் கிரீக்கு முதலிய பலமொழிப்புலமைவாய்ந்தவர்; இளமையிலேயே பலகலைத்துறையும் பயின்று பேரறிவும் துறவுள்ளமும் உடையராய்க் கிறிஸ்தவசங்கத்திற் சேர்ந்து, அச்சங்கத்தார் தந்த குருப்பட்டம் பெற்றுக் கிறிஸ்துமதப்பிரசாரத்தின் பொருட்டுத் தமிழ்நாட்டையடைந்தவர்; தமிழ்நாட்டிலே பல இடங்களில்

தங்கிக் கிறிஸ்துமதப்பிரசாரம் செய்துவந்ததுடன் தமிழும் பயின்று வல்லராய் இலக்கியமும் இலக்கணமுமான பல தமிழ்நூல்களை இயற்றிச் சிறப்புற்றவர்; தமிழிலே முதன்முதல் வசனரூபமான நூல்களை எழுதியவருள் ஒருவர்; தமிழிலே பல அகராதிகள் தோன்றுதற்கு மூலமான சதுரகராதியை இயற்றியவர்; பிற்காலத்துத் தமிழிலே பாரகாவியஞ்செய்து பிரசித்தியடைந்த பிறநாட்டினருள் முன் எண்ணத்தக்க பெருமையுடையவர்; சற்றேறத்தாழ 36 ஆண்டுகள் தமிழ்நாட்டில் வாழ்ந்து தாம் இயற்றிய நூல்களாற் புகழுடம்பெய்தித் தமிழ்நாட்டிலேயே தம் பூதவுடம்பை நீத்தவர்; பெயரளவாலும் பிறநாட்டினர் என்று தோன்றாதவாறு தமிழ்மக்களால் வீரமாமுனிவர் என்ற பெயர் சூட்டிப் பாராட்டப்பெற்றவர். வேற்றுமொழிபயிலும் அயல்நாட்டுப் பிறமதத்தினரான இவர், பல இடையூறுகளுக்கிடையே தாமே விரும்பித் தமிழ் பயின்று சிறந்த புலமையும் அடைந்து தமிழிலே இலக்கிய இலக்கண நூல்களையியற்றிப் புகழ்படைத்தசெய்தி நம் தமிழிளைஞர்களாற் குறிக்கொள்ளத்தகும்.

இம்முனிவர்விஷயமாக மதுரைக் கத்தோலிக்கு ஸேவாசங்கத்தார் வெளியிட்ட நினைவுமலர் வரப்பெற்றோம். அதில் அச்சங்கத்தார் மதுரையில் 1943-ஆம் ஆண்டு அக்டோபர்மீ 17உ கொண்டாடிய வீரமாமுனிவர் திருநாளில் அவைத்தலைவர் நிகழ்த்திய பேருரையும், வரவேற்பாளர் நிகழ்த்திய விரிவுரையும் ஆகியவற்றுடன், முனிவர்வரலாற்றுச்சுருக்கமும் அவர் இயற்றிய தொண்டின் பெருமையும் அவர் புகழும் அவர் நூல்களின் நயமும் பிறவும் பல புலவர்களால் பலபடியாக விரித்தெழுதிய 14 தமிழ்க்கட்டுரைகளும், வாழ்த்துப்பாடல்களும், இம்முனிவர்விழா தூத்துக்குடி, நெல்லை, மதுரை, ஆல்வாய் நகரங்களில் நிகழ்ந்த விவரங்களும் நல்ல காகிதத்தில் அழகாக அச்சிடப்பட்டுள்ளன.

முனிவர்திருநாளைச் செவ்வியமுறையிற் கொண்டாடி இந்நினைவுமலரை அச்சிட்டு வெளியிட்ட மதுரைக் கத்தோலிக்கு ஸேவாசங்கத்தார் நன்முயற்சி பாராட்டத்தக்கது.

ஸ்ரீ:

# பரதசேனுபதீயம்

T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர்.

சென்ற மாசிச்செந்தமிழிலே மதிப்புரை வரையப்பெற்ற பரத சேனுபதீயம், சிலப்பதிகாரவுரையிற் குறிக்கப்பெற்ற பரதசேனுபதீயத்தின் வேருனது. இந்நூலின் பொதுப்பாயிரத்து நூல், நுவல்வோன் என்னும் பகுதிகளே இதுபொழுது கிடைத்துள்ளன. இவ்விரண்டுபகுதிகளையும் உரைக்கும் 66 சூத்திரங்களுள் 58 நூற்பாவும் 8 கட்டளைக்கலித்துறைகளும், அவற்றுக்குக் கருத்து, பொருள், பதசாரம் என்பவற்றுள் ஏற்பனகாட்டிச்செல்லும் பழையவுரையும், பதிப்பாசிரியர் எழுதிய புதிய குறிப்புரையும் உள. மூலத்துள்ளும் உரையுள்ளும் வடசொற்களும் சொற்றொடர்களும் மிக விரவியுள்ளன. அவற்றுள் பிழைபட்டனவும் பல. மூலத்தால் திருந்தவேண்டிய உரைப்பகுதிகளும் உரையால் திருந்தவேண்டிய மூலசூத்திரப்பகுதிகளும் உள. ஆங்காங்கு ஊகத்தால் திருந்தவேண்டியனவும் உண்டு. இதனை இயற்றியவர் பரதநூற்பயிற்சியோடு சைவசமயநூற்பயிற்சியும் உடையவர் என்று தெரிகிறது. அவர்பெயர் காலம் முதலியனவும் உரையாசிரியர் பெயர் காலம் முதலியனவும் புலப்படவில்லை. சூத்திரங்களும் உரையும் இடையிடையே பிழைபட்டும் தெளிவற்றும் காணப்படுதலால் அவை முதன் முறையாக ஒருவாறு இயற்றப்பெற்றுப் பின் திருத்திச் செம்மை செய்யப்படாதநிலையில் அமைந்தன என்றும், நூலுள், கட்டளைக் கலித்துறை பயின்றமையானும் வடமொழிவிரவிய சூத்திரஉரை நடையமைதியானும் அவை மிகமிகப் பிற்காலத்தில் இயற்றப்பட்டன என்றும் ஊகிக்கத்தக்கனவாய் உள்ளன.

இதன் முதற்சூத்திரம் பிற ஏடுகளிலும் எழுதப்பெற்றிருப்பி னும், பரதசாத்திரப்பிரவர்த்தகர்களான சபாநாயகர் உமாதேவி விநாயகர் முருகன் முதலியோர்விஷயமாய் அமைந்திருத்தலால் இந்நூற்கு ஏற்புடையதாயிருக்கிறது. அதனை இந்நூலாசியர் முன் னோர்மொழியாக எடுத்தாண்டிருத்தலும் கூடும்.

நாட்டியக்கலையின் பண்டைவரலாறுன பல அரிய செய்திகளை விரிக்கும் இச்சிறியநூலின் ஓலைச்சுவடியேனும் காகிதக்கையெழுத் துப்பிரதியேனும் என்னிடம் இல்லை. இந்நூலைப் படித்துவரும் பொழுது மூலத்திலும் உரையிலும் குறிப்புரையிலும் யான் கண்ட திருத்தங்கள் இதனைப் பயில்வார்க்குப் பயன்படுமென்று கருதி இங்கே குறிக்கப்படுகின்றன. அவற்றுள் ஏற்பனகொண்டு ஏலாதவற்றை விட்டுவிடுதல் அறிஞர்கடன்.

2-ஆம்பக்கம் 2-ஆம் சூத்திரத்து 7-ஆம் அடியின் முன் இரண்டுசீர்கள், 'பகுதிசால் விளக்கும்' என்றும், அவற்றுக்கு உரை 'பகுதிகளை மிகவிளக்க நடித்தருளும்' என்றும் உள்ளன. மூலத்தில் உள்ள சால் என்பது சால-மிக என்று பொருள்தராது. 'பகுதிசால விளக்கும்' என்று கொள்ளின், செய்யுளோசை சிதையும். ஆதலின் உரையில் 'மிக' என்பதனை மூலத்துள்ள சொற்குப் பொருளாகக் கொள்ளாது உரையாசிரியரால் ஏற்றபெற்றி வருவித்துரைத்த தெனக்கொண்டு, உரையுள், 3-ஆம் பக்கத்து 2-ஆம் வரியில் 'பகுதிகளை' என்றிருப்பதற்கிசைய மூலத்துள், ('பகுதிசால் விளக் கும்' என்றிருப்பதை) 'பகுதிகள் விளக்கும்' என்று திருத்திக் கொள்ளிற் பொருளமைதியும் ஓசையின்பமும் பெற்று மூலம் சிறக்கும்.

3-ஆம் பக்கம் 17-ஆம் வரியில் 'ஆங்கீகாதியபிநயம்' என் றுளது. வடநூலிலக்கணப்படி அமைந்த அது 'ஆங்கிகாதியபிநயம்'

என்றிருத்தலே தவறற்றதாகும். 22-ஆம் பக்கத்து 27-ஆம் சூத்திரத்தில், 'ஆங்கிகத்தை' என்று காணப்படும் பிரயோகமும் இதனை வலியுறுத்தும்.

5-ஆம் பக்கம் 3-ஆம் வரியில் 'இது தாருகாவன நிமித்தமாம்' என்றிருப்பது, 'இது தாருகாவனமுனிவர்நிமித்தமாம்' என்றிருப்பிற் சிறக்கும்.

5-ஆம் பக்கத்து 21—25 வரிகளிலே பரதம் என்ற பெயர் உண்டானவாறுரைக்குமிடத்து, "......பாவத்திலிருந்து பகாரமும், ..........ராகத்திலிருந்து ரகாரமும், .........தாளத்திலிருந்து தகாரமும், ம் என்ற சுத்தியும் சேர்த்துப் பரதம் என்ற பெயர் உண்டாயிற்று" என்று உரைத்தொடர் காணப்படுகிறது. அதனுள், 'ம் என்ற சுத்தியும் சேர்த்து' என்பதிற் சுத்தி என்பதற்கு மகாரவொற்றோடும், முற்கூறிய பாவ ராக தாளங்களோடும் எவ்வாற்றானும் இயைபு புலப்படவில்லை. சுத்தி யென்பதற்கு 8-ஆம்பக்கத்துக் குறிப்புரையுள் 14-ஆம் வரியிற் காட்டியபடி தூய்மையென்று பொருள்கொள்ளினும் மேற்கூறியவற்றோடு பொருந்துமாறில்லை. இதனைக் கூர்ந்துநோக்கியதில் 'ம் என்ற சுத்தியும் சேர்த்து' என்ற அவ்வுரைப்பகுதி, பரதம் என்ற பெயரின் இறுதி மகாரவொற்று வந்தவாறு கூறுவதாயிருத்தலாலும், சுருதியில் மகாரவொற்றொலியெழுமென்பது இசைநூன்முடிபாதலாலும், அவ்வுரைப்பகுதியுள், சுத்தி என்பது சுருதி என்றிருக்கவேண்டுமென்றும், எனவே அவ்வுரைப்பகுதி, 'ம் என்ற சுருதியும் சேர்த்து' என்றிருக்கவேண்டுமென்றும், சுருதி என்பதே தன் இரண்டாமெழுத்தாகிய ரு செல்லரிக்க உருவழிந்து நின்ற மூலப் பிரதிக்குப் படியெழுதிய இசைப் பயிற்சியில்லாத எழுத்தாளரால் சுத்தி என்று பிழைபட எழுதப் பட்டிருக்கலாமென்றும் ஊகிக்கக்கிடக்கிறது. சுருதி(-இங்கு) இசையைச்சிறப்பிக்க அதனுடன் ஒத்திசைக்கும்படி எழுப்பப்படும்

துணையொலி. இச்சுருதிக்குப் பாவ ராக தாளங்களோடு இயை புடைமை இசைவல்லாரிடை வெளிப்படை. பாடகருடைய கண் டத்தொனிக் கிசையக் கருவிகொண்டு துணையொலியெழுப்புதலைச் சுருதிகூட்டுதல் அல்லது சுருதிபோடுதல் என்று சாதாரணமக்கள் வழங்குதலும் இதனை வலியுறுத்தும். மகரவொற்றுக்குச் சுருதி யோடு இயைபுடைமை, 'மகரத்தின் ஒற்றுச் சுருதி விரவும்'* என்ற சிலப்பதிகார அடியார்க்குநல்லாருரைமேற்கோளால் அறியத்தகும். இவற்றால் மேற்குறித்த உரைப்பகுதி,'ம் என்ற சுத்தியும் சேர்த்து' என்றிருப்பதை, 'ம் என்ற சுருதியும் சேர்த்து' எனவும், 8-ஆம் பக்கத்துக் குறிப்புரையிலே 14-ஆம் வரி 'சுத்தி-தூய்மை' என் றிருப்பதைச் 'சுருதி-இசையைச் சிறப்பிக்க அதனோடொத்திசைக்கு மாறு எழுப்பப்படும் துணையொலி' எனவும் திருத்திக்கோடலே அமைவுடையதாம் என்பது போதரும். இங்கு, 'ம் என்ற சுருதி யும்' என்ற உரைப்பகுதிக்கு, அவ்வுரைத்தொடரில் பாவத்தி லிருந்து பகரமும் ராகத்திலிருந்து ரகரமும் தாளத்திலிருந்து தகர மும் என்று முன் கூறிவந்ததற்கேற்பச் 'சுருதியிலிருந்து மகரவொற் றும்' என்பது கருத்தாகக்கொள்க.

8-ஆம் பக்கம் 3-ஆம் வரியில் 'இது வருணாத்மகம், நாதாத் மகத்தோடு கூடியிருக்கும்' என்றிருப்பது, 'இது வருணாத்மக நாதாத்மகங்களோடு கூடியிருக்கும்' என்றிருப்பிற் சிறக்கும்.

8-ஆம் பக்கம் 5-ஆம் வரியிலே 'பிரமாந்தரத்தில்' என்றிருப் பது, 'பிரமரந்திரத்தில்' என்றிருக்கவேண்டும். பிரமாந்திரத்தில் என்பதே ஈண்டையுரைக்கியைபுடையதென்பது விரிக்கவேண்டா.

9-ஆம் பக்கத்தில் 3-ஆம் சூத்திரத்தில் முதலடியிறுதி 'பகரு மதன்' என்றுளது. அச்சூத்திரம் பாதமென்ற சொல்லில், பகரத் திற்குரிய ஓசை முதலியவற்றைக் கூறுகிறது. 'பகருமதன்' என்ற

---

* சிலப்பதிகாரம் முதற்பதிப்பு. பக். அ௫. வரி. 16.

பாடம் பகரத்தைக்குறியாது முன்னுள்ள பரதமென்ற சொல்லைச் சுட்டிப் பிழைபடுதலின் அதனை நூல்பொருளொடு பொருந்து மாறு 'பகரமதன்' என்று திருத்திக்கொள்ளவேண்டும்.

9-ஆம்பக்கம் 11-ஆம் வரியில் 'உபதேசிக்கிறார்' என்றுளது. அது, அப்பக்கத்து நான்காஞ்சூத்திரத்து மூன்றாமடியிலுள்ள, 'உரைத்தான்' என்ற நூலாசிரியர்கூற்றை உரையாசிரியர் அநுவதித்துக்கூறுவதாகலின் 'உபதேசித்தானென்கிறார்' என்றிருக்க வேண்டும்.

10ஆம் பக்கம் எட்டாஞ்சூத்திரத்தின் முன்னிரண்டடிகள்,

"சாற்றிய நாளது சோதியும் ராசியும் தயங்குதுலாம்
தோற்றிய வுண்டி யமுதங் கதிசோல் விண்ணவராம்"

என்று பதிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் முதலடி தளைசிதைந்தும், நேரசையாற்றொடங்கிய கட்டளைக்கலித்துறையடிக்குரிய பதினாறெழுத்தின்மிக்குப் பதினேழெழுத்து விரவியும், அதனுள் 'சோதியும் ராசியும்' என்பதில் உள்ள உம் இரண்டும் நின்றுபயனின்மையென்னும் குற்றத்துக்கிலக்கியமாகியும், இரண்டாமடி தளைசிதைதலோடு அதற்குரிய பதினாறெழுத்திற் குறைந்து பதினைந்தெழுத்தான் முற்றியும் பிழைபட்டுக் காணப்படுகின்றன. முதலடியிற் பயின்ற 'உம்' இரண்டையும் நீக்கியும், இரண்டாமடியிற் 'கதிசொல்' என்றிருப்பதைக் 'கதிசொலில்' என்று மாற்றியும் படிக்கின் அவை மேற்கூறிய பிழைகளற்றனவாகும். (பாதம் என்பதனுள் மூன்றாமெழுத்தாகிய தகரத்துக்கு) நாள்-சோதி; இராசி-துலாம்; உண்டி-அமுதம்; கதி-விண்ணவர்; என்று அவ்வடிகளாற் கூறக்கருதியபொருளும் இனிதியையும். ஆதலால்,

"சாற்றிய நாளது சோதி யிராசி தயங்குதுலாம்
தோற்றிய வுண்டி யமுதங் கதிசொலில் விண்ணவராம்"

என்று அவ்வடிகளைத் திருத்திப் படித்துக்கொள்ளல் அமைவுடையதாகும். 2-ஆம் அடியிற் 'கதிசொல' எனக்கொள்ளினும் அமையும்.

13-ஆம்பக்கம் குறிப்புரையுள், 'மாணசம்-நினைக்கப்படுவது, வாசிகம்-சொல்லப்படுவது, காயிகம்-உடலால் செய்யப்படுவது' என்றுள்ளவை, "மானசம்-மனத்தின்கண் நிகழ்வது; வாசிகம்-வாக்கின்கண் நிகழ்வது; காயிகம்-உடலின்கண் நிகழ்வது" என்றிருப்பிற் சிறக்கும்.

14-ஆம்பக்கம் 8, 9-வரிகளில் 'காரணத்துவ அவசரங்களாக' என்று காணப்படுகிறது. வடநூன்முறைப்படி காரணத்துவ அவசரம் என்பது பிழையென்பர். மூலத்துள், 'காரணம்' என்ற சொல்லே காணப்படுவதால் அதற்கிசைய உரையைக் 'காரணுவசரங்களாக' என்று திருத்திக்கொண்டு, அதற்கிசையக் குறிப்புரையை மாற்றியமைத்துக்கொள்வது இயைபுடையதாகும்.

15-ஆம்பக்கம் 15-ஆம் சூத்திரத்து இரண்டாமடியின் முதன் மூன்றுசீர், 'உறைதருதத்துவமுற்று' என்றும், அவ்வடிப்பகுதிக்கு உரை, 'கருத்திருத்துபாவத்தை எய்தி' என்றும் உள்ளன. 'உறைதருதத்துவம்' என்ற மூலம் 'கருத்திருத்துபாவம்' என்று பொருள்படாது. 'கருத்திருத்து பாவத்தை எய்தி' என்ற உரைப்பகுதியுள், 'கருத்திருத்து' என்பதற்குமட்டும் 'மனத்தில் பதிக்கும்' என்று விளக்கமெழுதிய குறிப்புரைகாரர், 'பாவத்தை எய்தி' என்ற பிற்பகுதிக்கு விளக்கம் எழுதவில்லை. 'மனத்தில் பதிக்கும்' என்ற குறிப்புரையாலும் மூலமும் உரையும் விளங்குமாறில்லை. அச்சூத்திரம் பிரவிர்த்தனிலக்கணங்கூறுகிறது. அதன் பிற்பகுதியிற் (சிவம்) 'சத்தியோடொத்து' என்று வருதற்கிசைய, முற்பகுதி, 'கருத்திருத்துவத்தையெய்தி' என்றிருத்தல் பொருத்தமுடைத்தாகும். ஆகவே, 'உறைதருதத்துவமுற்று' என்றுள்ள சூத்திரப்பகுதியை, 'உரைகருத்திருத்துவமுற்று' என்றும், 'கருத்திருத்துபாவத்தையெய்தி' என்றுள்ள உரைப்பகுதியைக் 'கருத்திருத்துவத்தையெய்தி' என்றும் திருத்திக்கொள்ளல் தகும். கருத்திருத்துவம்—கர்த்திருத்வம்—கர்த்தாவாயிருக்குந்தன்மை. 'உரைகருத்திருத்துவமுற்று' என்ற பாடத்தாற் சூத்திரம் சீர் தளை சிதையாமையோடு, பொருளமைதியும் உறும்.

'உரைகருத்திருத்துவமுற்று' எனவும் 'கருத்திருத்துவத்தையெய்தி' எனவும் முன்பிருந்த மூலமும் உரையுமே, பின்பு 'உறைதருதத்துவமுற்று' என்றும், 'கருத்திருத்துபாவத்தை எய்தி' என்றும் பிழைபட எழுதப்பட்டிருக்கலாமென்று தோன்றுகிறது. ஏடெழுதுவோர், ரகர றகர பேதமின்றி எழுதுதலால் மூலத்துள் உரை என்பது உறை என்று பிழைபடல் கூடும். கருத்திருத்துவம் என்ற வடசொல்லின்பொருளறியாமை முதலிய காரணங்களால் மூலத்துள் 'கருத்திருத்துவம்' என்பது தருதத்துவம் என்று பிழைபடல்கூடும். கருத்திருத்துவத்தையெய்தி என்ற உரைப்பகுதியின்பொருளறியாத எழுத்தாளர், இந்நூலுள் இடையிடையே பாவ ராக தாளங்கள் பேசப்படுதல்கொண்டு அவற்றுள் இங்கே பாவம் பேசப்படுவதாக எண்ணிக் 'கருத்திருத்துவத்தை' என்பதனிடையே பகர ஆகாரத்தைப்பெய்து 'கருத்திருத்துபாவத்தை' என்று எழுதிவிட உரைப்பகுதி பிழைபடல்கூடும். 'கருத்திருத்து பாவத்தை எய்தி' என்றவுரைப்பகுதியுள் இடையேயுள்ள பகர ஆகாரத்தை நீக்கவே, 'கருத்திருத்துவத்தையெய்தி' என்று உரைப்பகுதி பிழையற்றுநிற்பது இதனை வலியுறுத்தும்.

15-ஆம்பக்கம் 16, 23வரிகளிலும் 16-ஆம்பக்கம் 12-ஆம்வரியிலும் 'நியாமகத்துவம்' என்ற ஒரே வடசொல், முறையே நியாயமகத்துவம், நியாயாமகத்துவம், நியாயமகத்துவம் என்று பலபடியாகப் பிழைபடப்பதிக்கப்பட்டுளது. அம்மூன்றிடத்தும் நியாமகத்துவம் என்றே திருத்திக்கொள்ளுதல் அமையும்.

19-ஆம் பக்கம் 5-ஆம் வரியில் 'முனிக்குஞ் செப்பினன்' என்றிருப்பது, 'முனிவர்க்குஞ் செப்பினன்' என்றிருக்கவேண்டும்.

19-ஆம்பக்கம் 10-ஆம்வரியில் 'அரிப்பிரமாதி அம்பிகைக்கும்' என்றிருப்பது, மூலசூத்திரத்துக்கியைய, 'அரிபிரமர்க்கும் அம்பிகைக்கும்' என்றிருப்பின் வழுவற்றுச் சிறக்கும்.

20-ஆம்பக்கம் முதல்வரியில் 'துன்பிழிந்து' என்றுளது. 'துன்பிழிந்து' என்பது 'துன்பம் நீங்கி' என்று பொருள்படாது, 'துன்பத்துள் இழிந்து' (புகுந்து) என்று மறுதலைப்பொருள்படுமாதலின், துன்பிழிந்து என்பதனைத் துன்பம்நீங்கி யென்ற பொருள்படத் துன்பொழிந்து என்று திருத்திக்கொள்ளுதல் அமைவுடையதாகும்.

20-ஆம்பக்கம் 2-வது வரியில் 'வாழச்செப்பினன்' என்றிருப்பது 'வாழ்கெனச் செப்பினன்' என்றிருக்கவேண்டும். 'வாழ்க' என்பது இறைவன் கூற்று. அதனை நூலாசிரியர் இங்கு அநுவதித்துக்கூறுதலால் 'வாழ்கெனச்செப்பினன்' என்றிருத்தலே தவறற்றதாகும்.

20-ஆம்பக்கம் 17-ம் வரியில் 'அகத்தினினைத்ததுவாம்' என்றிருப்பதனை, 'மனத்தில் நினைத்தது பாவமாம்' என்ற உரைக்கிசைய 'அகத்தினினைத்ததுவாகும்' என்று திருத்திக்கொள்ளல் வேண்டும்.

21-ஆம்பக்கம் 24-ஆம் வரியில், 'தோற்றமாகாமியந்தான்' என்றிருப்பதனை, அப்பக்கத்து 'ஆகாரியமே' என்ற 26-ஆம் சூத்திரப் பிரயோகத்துக்கு இசையத் 'தோற்றமாகாரியந்தான்' என்று திருத்திக்கொள்ளல்வேண்டும்.

22-ஆம்பக்கம் 27-ஆம் சூத்திரத்துள் 3-ஆம் அடியில் 'சூசிகா பாவசா' என்றிருப்பது, வடநூன்முறைப்படி 'சூசிக பாவச' என்றிருக்கவேண்டும்.

23-ஆம்பக்கம் 12-ஆம்வரியில் 'பாடகந்தான்' என்றிருப்பது 'பாடகன்றான்' என்றிருக்கவேண்டும். பாடகன் பாட, நடி அப்பாடற்கிசைய அபிநயங்காட்டி நடிக்கும் ஆவாகிகதொந்தத்தை விளக்கும் இச்செய்யுளிற் பாடகனுக்கேயன்றிப் பாடகத்துக்கு இயைபில்லையாதலின் 'பாடகன்றான்' என்பதே தவறற்றதாகும்.

29-ஆம் பக்கம் 18, 19-ஆம் வரிகளில் 'நிஷதம்' 'மந்திரம்' என்று இரண்டு சொற்கள் காணப்படுகின்றன. இசையொடு தொடர்புடைய சுரப்பிரத்தாரங்களைப்பேசும் இவ்விடத்து 'நிஷதம்', 'மந்திரம்' என்ற சொற்களுக்கு இயைபில்லையாதலின், நுவல்பொருட்கிசைய அவற்றை 'நிஷாதம்', 'மந்தரம்' என்று திருத்திக்கொள்ளல் அமைவுடையதாகும்.

32-ஆம் பக்கம் குறிப்புரையுள் இறுதியிரண்டுவரி, "இச்சூத்திரவுரையில், பாவினமாவது என்பது பண்ணுவது என்று இருத்தல்வேண்டுமென்று தோற்றுகிறது" என்று பதிக்கப்பட்டுளது. இப்பக்கத்து 40-ஆம் சூத்திரத்துப்பயின்ற சிந்து, இராகம், பா, இனம், பண் என்பவற்றை உரை முறையே விளக்கிவருதலாலும், மேற்குறித்த பாவினமாவது என்ற உரைத்தொடரின்கீழ்த் தனி உரைத்தொடரால் பண் விளக்கப்படுதலாலும், மேற்குறித்த பாவினமாவது என்பது உள்ளபடி இருத்தலே அமையும் என்று தோற்றுகிறது.

34-ஆம்பக்கம் 45-ஆம் சூத்திரத்தின் தலைப்பு அனுமகடகம் என்றிருப்பது, அதற்குமுந்திய சூத்திரங்களில் அம்பிகைசெய்தது, கணபதிசெய்தது, கந்தன்செய்தது என்று தலைப்பு அமைந்தவாறே இங்கும் அனுமன்செய்தது என்றிருப்பிற் பொருத்தமுடைத்தாகும்.

35-ஆம்பக்கம் 2-ஆம் வரியில் 'சன்னியாாகம்' என்றிருப்பது அச்சூத்திரவுரையிலிருப்பதுபோலச் 'சன்னியாகம்' என்றிருத்தலே தவறற்றதாகும்.

36-ஆம் பக்கத்துக் குறிப்புரையுள், சுத்தானந்தப்பிரகாசம் என்ற நூலிலிருந்து இரண்டுசெய்யுள் மேற்கோளாக எடுத்தாளப்பட்டுள்ளன. அவற்றுள் முதல்வெண்பாவின் நான்காம் அடி, 'மூட்ட மூட்ட முகசாளயம்' என்று பதிக்கப்பட்டுள்ளநிலையில் வெண்டளை சிதைந்துகெடுதலின் அதனை "முட்ட முகசாளயம்" என்று திருத்திக்கொள்ளல் அமைவுடையதாகும்.

‘மெய்சாய் விடைநெளிவு’ என்று தொடங்கும் இரண்டாவது செய்யுளிலே தனிச்சொல்லிலிருந்து பின்னிரண்டடிகள்,

“...........................................கைகள்வி
ரித்தல் குவித்தலிவை சிங்களமா மென்று தெரி
வித்தனர் தண்டமிழோர் தேர்ந்து”

என்று வகையுளி பயிலவும் மோனைநயம் கெடவும் பிரித்துப் பதிக்கப்பட்டுள்ளன. அவை,

“...........................................கைகள்
விரித்தல் குவித்தலிவை சிங்களமா மென்று
தெரித்தனர் தண்டமிழோர் தேர்ந்து”

என்றிருப்பின் மேற்குறித்த பிழைகளற்றனவாய் மோனை எதுகை நயங்களும் வாய்ந்து சிறக்கும்.

37-ஆம்பக்கம் முதல்வரியிற் ‘கூவிளம்புனையுமாநந்திகேட்கக் கூறினன்’ என்றிருப்பது, ‘கூவிளம்புனையும் அரன் நந்திகேட்கக் கூறினன்’ என்று பொருள்படும்படி ‘கூவிளம் புனையு மரனந்தி கேட்கக் கூறினன்’ என்றிருப்பிற் பொருளொடுபொருந்தியமையும்.

37-ஆம்பக்கத்து 47-ஆம் சூத்திரத்தின் தலைப்பு, கீதப்பிரபந்தம் என்றிருப்பதை, மற்றைச் சூத்திரங்களுக்குத் தலைப்பமைந்த முறைக்கிசையத் திருமால்செய்தது என்றும், அச்சூத்திரத்தைச் சீரும் தளையும் ஓசையும் மோனைநயமும் சிறக்குமாறு,

“அரிநா தத்தை வருணதொனி யாத்மக
மென்றிரண் டியற்றிக் கீதப் பிரபந்த
நூலை நூற்றுத் தண்டு முனிவ
ராதி யோர்க்கங் கறைந்தனன் றானே”

என்றும் மாற்றியமைத்துக்கொள்ளல் சிறக்கும். இப்பக்கத்து 49-ஆம் சூத்திரத்தின் தலைப்பு, ‘சரசுவதிசெய்தது’ என்றிருக்க வேண்டும்.

38-ஆம்பக்கம் 51-ஆம் சூத்திரத்தின் தலைப்பு, 'பிரகஸ்பதி' என்றிருப்பதைப் 'பிரகஸ்பதிசெய்தது' எனவும், அச்சூத்திரவுரை 4-வது வரியில் சக்ஷுஷிய என்றிருப்பதை, வடநூன்முறைப்படி சாக்ஷுஷிய எனவும் திருத்திக்கொள்ளவேண்டும்.

39-ஆம் பக்கம் 52-ஆம் சூத்திரத்தின் தலைப்பு 'சுக்கிரன்' என்றிருப்பது, 'சுக்கிரன்செய்தது' என்றிருக்கவேண்டும். அச்சூத்திரத்தின், 4-ஆம்அடி 'இராவணன் போதா யனர்க்கிசைத் தனனே' என்று காணப்படுவதை, 'இராவண போதாயனர்க் கிசைத்தனனே' என்று திருத்திக்கொள்ளவேண்டும். கபிலபரணர் என்பதுபோல இராவண போதாயனர் என்று வருவதே முறை. 'இராவணன் போதா யனர்க்கிசைத்தனனே' என்று பதிப்பிலுள்ளவாறே கொள்ளின், 'இராவணன், போதாயனர்க்குச் சொன்னான்' என்று பொருள் பட்டுச் 'சுக்கிரன் இராவண போதாயனர்க்குச் சொன்னான்' என்னும் சூத்திரத்தொடு மாறுகொள்ளுமாதலின், 'இராவண போதா யனர்க் கிசைத் தனனே' என்று கோடலே அமைவுடையதாகும்.

39-ஆம் பக்கம் 53-ஆம் சூத்திரத்தின் தலைப்பு மற்றைச்சூத்திரங்களுக்கமைந்தபடியே 'இராவணன்செய்தது' என்றிருப்பிற் சிறக்கும்.

39-ஆம்பக்கம் 54-ஆம் சூத்திரத்தின் தலைப்பு, 'சூரியன்' எனவும், சூத்திரம், 'சூரியன் சந்திரன் ............சொற்றனன்' எனவும், உரை 'சூரியன் சந்திரன் ..................உபதேசித்தனன்' எனவும் பதிக்கப்பட்டுள்ளன. சூத்திரத்திலும் உரையிலும் சந்திரன் என்ற சொல் பயனிலையின்றி நின்றுவற்றுகிறது. ஆதலின், தூளைக்கருவி தோற்கருவிகளின் இலக்கணங்கள் சுவேதமுனிமுதலியோர்க்கு உபதேசிக்கப்பெற்றவாறு கூறும் இச்சூத்திரத்தின்தலைப்பு, சூரிய சந்திரர்செய்தது எனவும், சூத்திரம்,

"சூரிய சந்திரர் ஈாகசுர முதலிய
துளைதோற் கருவி வாத்திய விலக்கணம்
சுவேதமுனி முதலி யோர்க்குச் சொற்றனர்"

எனவும், உரை "சூரியசந்திரர் ........உபதேசித்தனர்" எனவும் இருந்தால் அமைவுடையதாயிருக்குமென்று தோற்றுகிறது.

40-ஆம்பக்கம் 56-ஆம் சூத்திரத்து 3-ஆம்அடி, 'அவற்றை நான்கொடு நந்நான்காக்கி' என்று காணப்படுகிறது. உரையுள் இவ்வடிப்பொருள் விடுபட்டுள்ளது. 4-ஆம் அடிக்குரிய உரையால் மூன்றும்அடியிலுள்ள நான்கு நந்நான்கு என்பவை சதுரங்கம், சோடசாங்கம் என்று கொள்ளக்கிடக்கிறது. நான்கென்பது இரட்டிக்குமிடத்து நந்நான்கு என வரும்; 16 என்று பொருள்பட உறழின் நான்கு×நான்கு=நானுன்கு என வருவதன்றி நந்நான்கு என வராது. இங்கு நந்நான்காக்கி என்பது பதினாறாக்கி என்று பொருள் கொள்ளக்கிடத்தலால் அதற்கிசைய மூன்றாமடியிறுதியை 'நானுன் காக்கி' என்று திருத்திக்கொள்ளல் அமையும். இச்சூத்திரவுரையுள் 3-ஆம் வரியில் 'அவற்றையும்' என்பதன்பின் (விடுபட்டுள்ள 3-ஆம் அடியின் உரையை) 'சதுரங்கம் சோடசாங்கம் என வகுத்து' என அமைத்துக்கொள்ளவேண்டும். 4-ஆம் அடி, 'சிவன் சிவை முறையே வொருமையைத் தெரிந்து' என்று பதிக்கப்பட்டுளது. அதனுள் ஒருமை என்பதை 'உரிமையுடையன' என்றுள்ள உரைக்கிசைய 'உரிமை' என்று திருத்திக்கொள்ளல் அமையும்.

41-ஆம்பக்கம் 57-ஆம் சூத்திரத்து 5-ம் அடியுள் 'அங்கமற்றுள' என்றிருப்பது, உரைக்கிசைய 'அங்கமவற்றுள்' என்றிருத்தலே அமைவுடையதாகும்.

58-ஆம் சூத்திரத்தின் தலைப்பு வியாசகடகம் என்றிருப்பது, 'வியாசர்செய்தது' என்று (ஒரு முறையாக) அமைதல் சாலும்.

42-ஆம்பக்கம் 60-ஆம் சூத்திரத்தின் தலைப்பு, 'தத்திலர்' என்றுளது. சூத்திரம், 'தத்திலன் விக்கிரமன்றனக்குங் கோகளன், போசமன்னற்கும் புகன்றனன்றானே' என்றுள்ளது. எனினும், 'தத்திலன் விக்கிரமற்கும் கோகளன் போசமன்னற்கும் புகன்றனர்' என்னும் நூவல்பொருட்கிசையச் சூத்திரத்தின் தலைப்பைத் 'தத்தில கோகளர் செய்தது' எனவும், சூத்திரத்துள், 'புகன்றனன்றானே' என்று ஒருமைவாய்பாட்டான் முடிவுற்றிருப்பதைப் பன்மைவாய்பாட்டான் முடியும்படி 'புகன்றனர்தாமே' எனவும் திருத்திக் கொள்ளல் அமையும்.

43-ஆம்பக்கத்து முதல்வரியிலே 'கண்டரன்' என்றிருப்பது, கண்டு என்னும் எச்சவாய்பாடான உரைக்கிசைய (முற்றெச்சவாய் பாடான) கண்டான் என்றிருப்பின் அமையும். 4-ஆம் வரியுள், 'கோபிகைக்கும்' என்றிருப்பது, கோபிகாஸ்திரீகள் என்றுள்ள உரைக்கிசையக் 'கோவியர்க்கும்' என்றிருப்பின் அமையும்.

43-ஆம் பக்கம் 63-ஆம் சூத்திரத்தின் தலைப்பு, 'சாரங்க தேவன் மஹாபாரதம், மஹாபாரதசூடாமணி' என்றிருப்பது, 'சாரங்க தேவன் செய்தவை' என்றிருப்பிற் சிறக்கும்.

46-ஆம்பக்கம் 13-ஆம் வரியில் ஆடலாசிரியர்க்கு என்றிருப் பது, ஆடலாசிரியற்கு என்றிருப்பின் அமையும்.

47-ஆம் பக்கம் குறிப்புரையுள் எடுத்தாண்ட சிலப்பதிகார அரங்கேற்றுகாதையடிகளுள் (6) 'நெறியின்' என்றிருப்பது, சிலப் பதிகாரத்துள்ளவாறு 'நெறியின' என்றிருக்கவேண்டும்.

47, 48-ஆம் பக்கங்களில் 65-ஆம் சூத்திரத்தின்பொருளுக் 'கும் பொருள்விளக்கம் என்ற பழைய உரைவிசேடத்துக்கு மிடையே குறிப்புரை புகுத்தப்பெற்றிருக்கிறது. அது, முன் சூத்தி ரங்களிற் குறிப்புரைபதிக்கப்பட்டுவந்த முறையோடு மாறுகொள் ளும். ஆதலின் அதனை 52-ஆம் பக்கத்து மேற்குறித்தபொருள் விளக்கத்தின்முடிவிற் பதித்தல் அமையும். (2-ஆம் சூத்திரத்துக் குக் குறிப்புரை அச்சூத்திரத்தின் உரையெல்லாம் முடிந்தபின் 8-ஆம் பக்கத்துப் பதிக்கப்பெற்றிருத்தல் இங்கு நோக்கத்தகும்.)

அன்றியும், அக்குறிப்புரையின் தொடக்கத்து, 'இச்சூத்தி ரம் சிலப்பதிகாரம் மூலத்துள் பின்வருமாறு காணப்படுகிறது' என்று ஒருவாக்கியம் உள்ளது. அதனால் இந்நூல் சிலப்பதிகாரத் துக்கு முந்தியது என்று பயில்வார்க்குப் பிழையுணர்வு ஏற்படவும் கூடுமாதலால் அவ்வாக்கியத்தை, '.இச்சூத்திரம் சிலப்பதிகார அரங்கேற்றுகாதையுள் 12-முதல் 25வரையுள்ள அடிகளைத்தழுவி யமைந்தது' என்று திருத்திக்கொள்ளல் ஏற்புடைத்தாகும்.

52-ஆம்பக்கம் 66-ஆம் சூத்திரத்தின் முதலடியிலே, 'குழற் றண்ணுமை' என்றிருப்பது 'கூற்றண்ணுமை' என்றிருக்க வேண்டும்.

54-ஆம்பக்கம் பத்தழகு என்ற தலைப்பின்கீழ் உரைமேற்கோளாக ஒருசூத்திரம் காட்டப்பட்டுளது. அச்சூத்திரத்துக்கு முந்திய இந்நூற் சூத்திரங்களுக்கு இதன் பொருள், பதசாரம் என்பவற்றின் குறியீடாகிய 'இ-ள்' 'ப-ம்' என்பவற்றின் பின் உரைவிரித்த முறையே பத்தழகுகளை விரிக்கும் இச்சூத்திரத்துக்கும் அக்குறியீடுகளையிட்டு உரைவிரிக்கப்பெற்றிருத்தலாலும், உரையாசிரியர் மேற்கோளாக எடுத்தாளும் சூத்திரங்களுக்கு இக்குறியீடுகளிட்டு உரையெழுதுதல் முன் யாண்டும் இல்லாமையாலும் பத்தழகுகளை விரிக்கும் இச்சூத்திரம் இந்நூலின் 67-ஆம் சூத்திரமாக இருக்கலாம் என்று தோன்றுகிறது.

மேலும், அச்சூத்திரத்தின் 2-ஆம் வரியிலும் பதசாரம் 10-ஆம் வரியிலும் 'சிலக்ஷணம்' என்று ஒருசொல் காணப்படுகிறது. வடநூன்முறைப்படி அது சலக்ஷணம் அல்லது சிலக்ஷ்ணம் என்றிருப்பிற் சிறக்கும் என்று தோன்றுகிறது. அச்சூத்திரத்தின் 3-ஆம் அடியினிறுதி 'புகரம்' என்று பதிக்கப்பட்டுக் குறிப்புரையுள் (55-ஆம் பக்கம் 13-ஆம் வரியில்) 'புகரம்—அழகு' என்று பொருளும் விளக்கப்பட்டிருக்கிறது. புகர் என்பது அழகு என்று பொருள் படுமேயன்றிப் புகரம் என்பது அழகு என்று பொருள்படுதல் யாண்டும் கண்டதில்லை. ஆதலால் அச்சூத்திரவுரையுள் 'இப்பத்தும் அழகாம்' என்றிருப்பதற்கியைய, மூலத்துள் அழகு என்று பொருள்படும் புகர் என்ற சொல்லோடு ஆம் என்ற பயனிலைகூட்டிப் புகராம் என்றும், குறிப்புரையுள் 'புகர்—அழகு' என்றும் திருத்திக் கொள்ளல் அமைவுடையதாகும்:

அச்சூத்திரத்தின் பதசாரத்துள்ளும் குறிப்புரையுள்ளும், மந்திரம் மத்தியம், தாரகம் என்று காணப்படும் சொற்களுக்கு ஈண்டியைபில்லையாதலின், இங்கு நுவல்பொருளோடுபொருந்த அவற்றை மந்தரம், மத்தியமம், தாரம் என்று திருத்திக்கொள்ளல் அமையும்.

54-ஆம் பக்கத் திறுதிவரியிற் 'குழற்றண்ணுமை' என்றிருப்பது சிலப்பதிகாரத்துள்ளபடி குரற்றண்ணுமை எனவும், 55-ஆம் பக்கம் 17-ஆம் வரியில் 'விபரம்' என்றிருப்பது, விவரம் எனவும் இருக்கவேண்டும்.

பிற உள்ளனவும் விரிப்பிற் பெருகும்.

---